முதன்மை மாவட்ட நீதிமன்றம், பெரம்பலூர்.

முன்னிலை : திரு. V. பத்மநாபன், M.A. M.L., D.H.,
முதன்மை மாவட்ட நீதிபதி.

2026 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 29 ஆம் நாள், புதன்கிழமை.

மேல்முறையீட்டு வழக்கு எண்.62/2000
(Filing No.AS/62/2000)
(CNR No.TNPB01-000023-2000)
மற்றும்
குறுக்கு மேல்முறையீட்டு வழக்கு எண்.62/2000

1. என்.பஷீருதீன், (இறந்துவிட்டார்).

2. நூர்தீன்.

3. சொக்கர்லால் ஹுசைன்.

4. சாதிக் பாஷா.

5. மல்லிகா பீ.

6. ஜாஹீர் ஹுசைன்.

7. ஆரிப் ஹுசைன்.
( இடை நிலை மனு எண்.6/2026, 11.03.2026ன் படி இம்மேல்முறையீடு சீர்திருத்தம் செய்யப்பட்டுள்ளது)

.... மேல்முறையீட்டாளர்கள்/
வாதிகள்.

–எதிர்–

1. எஸ்.சையத் காதர், (இறந்துவிட்டார்).

2. எஸ்.மொஹமது அலி.

3. இ. சையத் காசின், (இறந்துவிட்டார்).

PADMANABAN VENKATASAMY

Prinicial District Judge,
Digitally signed by PADMANABAN VENKATASAMY
Location: Perambalur.
Date: 2026.04.29 20:43:42 +0530

4. பி. மார்சா சாஹீப், (இறந்துவிட்டார்).

5. எஸ். ஷேக் இமாம், (இறந்துவிட்டார்).

6. தமிழ்நாடு வஃப் போர்டுக்காக அதன் ஆய்வாளர், திருச்சி (வடக்கு).

7. தமிழ்நாடு வஃப் போர்டுக்காக அதன் செயலாளர் சென்னை–4.

8. ஆமினா பீ (இறந்துவிட்டார்).

9. சையத் அப்துல் அஜீஸ்.

10. சையத்கனி.

11. அன்சார் பீ.

12. குலாப்ஜான்.

13. மோதி ஜான்.

14. சரிடான் பீ (இறந்துவிட்டார்)

15. மும்தாஜ்.

16. கே. எஸ்.சலீம்.

17. நூர்ஜகான்.

18. சையத் கமால்.

19. சர்தாஜ் பேகம்.

20. நர்கீஸ் பேகம்.

21. நவ்ஷாத்.

PADMANABAN VENKATASAMY
Prinicial District Judge,
Digitally signed by PADMANABAN VENKATASAMY
Location: Perambalur.
Date: 2026.04.29 20:43:47 +0530

22. அமீர் பாஷா.

23. ஹசீத்பாஷா.

24. நூர்ஜகான்.

25. அன்சார்பேகம்.

26. ஹசீனா.

27. பீரோஷ் பீ (இறந்துவிட்டார்).

28. ஜம்ரூத் பீ.

29. தஷ்தாகீர்.

30. பாதூஷா.

31. அன்சார்.

32. சான்மா.

33. காதார்.

34. மும்தாஜ்.

35. ஷாகினா.

(இடைநிலை மனு எண்.1/2025, 24.01.2025 ன் படி இம்மேல்முறையீடு சீர்திருத்தம் செய்யப்பட்டுள்ளது.

.... எதிர்மேல்முறையீட்டாளர்கள்/
பிரதிவாதிகள்.

<u>குறுக்கு மேல்முறையீட்டு வழக்கு எண்.62/2000</u>:

1. தமிழ்நாடு வஃப் போர்டுக்காக அதன் கண்காணிப்பாளர்,
திருச்சி (வடக்கு).

2. தமிழ்நாடு வஃப் போர்டுக்காக அதன் செயலாளர்,
சென்னை–4. .....மேல்முறையீட்டாளர்கள்/
6, 7 பிரதிவாதிகள்.

PADMANABAN VENKATASAMY
Prinicial District Judge,
Digitally signed by PADMANABAN VENKATASAMY
Location: Perambalur.
Date: 2026.04.29 20:48:41 +0530

/எதிர் /

1. என்.பஷ்ரூதீன் …. எதிர்மேல்முறையீட்டாளர்/வாதி.

2. எஸ்.சையத் காதர்.

3. எஸ்.மொஹமது அலி.

4. இ. சையத் காசிம்.

5. பி. மார்சா சாஹீப்.
6. எஸ். ஷேக் இமாம்.

…. எதிர்மேல்முறையீட்டாளர்கள்/
1 முதல் 7 பிரதிவாதிகள்.

இம்மேல்முறையீடு மற்றும் குறுக்கு மேல்முறையீடு அசல் வழக்கு எண்.616/1985ல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பெரம்பலூர் 28.08.1995 அன்று பிறப்பித்த தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணைக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

<u>கீழமை நீதிமன்றத்தில் தரப்பினர்கள் விவரம்:–</u>
என்.பஷ்ரூதீன் …. வாதி.

–எதிர்–

1. எஸ்.சையத் காதர்.

2. எஸ்.மொஹமது அலி.

3. இ. சையத் காசின்.

4. பி. மார்சா சாஹீப்.

5. எஸ். ஷேக் இமாம்.

7. தமிழ்நாடு வஃப் போர்டுக்காக அதன் கண்காணிப்பாளர்,
திருச்சி (வடக்கு).

PADMANABAN VENKATASAMY
Prinicial District Judge,
Digitally signed by
PADMANABAN VENKATASAMY
Location: Perambalur.
Date: 2026.04.29 20:43:52 +0530

8. தமிழ்நாடு வஃப் போர்டுக்காக அதன் செயலாளர்,
சென்னை–4. .... பிரதிவாதிகள்.

இம்மேல்முறையீடு என் முன்பு 16.04.2026 அன்று இறுதி விசாரணைக்கு வரப்பட்டு, மேல்முறையீட்டாளர்களுக்காக வழக்கறிஞர் திருவாளர்கள்.வி.ராமமூர்த்தி, ஆர்.செந்தாமரைக்கண்ணன், பி.ஆனந்தஜோதி, ஆர்.திவ்யபாரதி, சி.துரைமுருகன் மற்றும் கே.விக்னேஷ், அவர்கள் ஆஜராகியும், 2 எதிர்மேல்முறையீட்டாளருக்காக வழக்கறிஞர் திரு.டி.ஆர்.ராமமூர்த்தி மற்றும் வி.முத்துசாமி அவர்கள் ஆஜராகியும், 6 மற்றும் 7 எதிர்மேல்முறையீட்டாளர்களுக்காக அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜராகியும், 18 மற்றும் 30 எதிர்மேல்முறையீட்டாளர்களுக்காக வழக்கறிஞர் திரு.ஆர்.பாலசுப்ரமணியன் அவர்கள் ஆஜராகியும், 1, 3, 4, 5, 27, 8, மற்றும் 14 எதிர்மேல்முறையீட்டாளர்கள் இறந்து விட்டநிலையிலும், 9 முதல் 13, 15 முதல் 17, 19 முதல் 26 மற்றும் 28, 29, 31 முதல் 35 எதிர்மேல்முறையீட்டாளர்களை தோன்றாத் தரப்பினர்களாக பாவித்தும், இருதரப்பு வாதங்களை கேட்டபின், இதுநாள் வரையில் என் பரிசீலனையில் இருந்து, இன்று இந்நீதிமன்றத்தில் பின்வருமாறு வழங்கப்படும்.,

## தீர்ப்புரை

இம்மேல்முறையீட்டு வழக்கானது பெரம்பலூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்ற அசல் வழக்கு எண்.616/1985–ல் 28.08.1995ஆம் தேதி பிறப்பித்த தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணையை ரத்து செய்ய கோரி மேல்முறையீட்டாளர்கள்/வாதிகள் தரப்பில் தாக்கல்.

2. வாதி தாக்கல் செய்துள்ள வழக்குரையின் சுருக்கம்:

வழக்கு சொத்துக்கள் 21.08.1985ல் வாதி கிரையம் வாங்கிய

PADMANABAN VENKATASAMY
Prinicial District Judge, Digitally signed by PADMANABAN VENKATASAMY Location: Perambalur. Date: 2026.04.29 20:44:09 +0530

வகையில் அவருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள். மேற்கண்ட வகையில் வாதி அமைதியான உடைமையிலும் அனுபவத்திலும் இருந்து வருகிறார். வாதிக்கு விற்றவர்களும், இச்சொத்தினை 20.05.1974ல் கிரையம் வாங்கியிருக்கின்றனர். வழக்கு சொத்துக்களுக்கு வாதிக்கு முன் வாங்கியவர்கள் பெயரிலும், அதன்பின்னர் வாதி பெயரிலும் பட்டா ஏற்பட்டு, அவ்வபோது கிஸ்து செலுத்தி மேற்படி சொத்துக்கள் அனுபவிக்கப்பட்டு வந்துள்ளது. வழக்கு சொத்துக்களில் வாதிக்கு அனுபவப் பாத்தியமும் உள்ளது.

வழக்கு சொத்தின்மீது பிரதிவாதிகளுக்கு எந்தவித உரிமையும் இல்லை. வழக்கு சொத்துக்களை வாங்கும் நேரத்தில் வாதிக்கும் , 1ஆம் பிரதிவாதிக்கும் இடையே போட்டி ஏற்பட்டது. வாதி முன்னதாகவே வழக்கு சொத்தினை வாங்கியதால், 1ஆம் பிரதிவாதி மற்ற பிரதிவாதிகளுடன் கூட்டு சதி செய்து, 1ஆம் பிரதிவாதியின் தூண்டுதலின் பேரில், மற்ற பிரதிவாதிகள் வாதியின் அமைதியான உடைமை மற்றும் அனுபவத்தில் தலையீடு செய்ய முயற்சித்து வருகின்றனர். மேலும், எதிர்மனுதாரர்கள் எண்ணிக்கையில் அதிகமாக இருப்பதாலும், அவர்களுக்கு அச்சுறுத்தும் தன்மையுடைய அசாதுவான நபர்களின் ஆதரவு இருப்பதாலும், வாதியின் உடைமை மற்றும் அனுபவத்தில் சட்டவிரோதமாக தலையீடு செய்ய முனைந்துள்ளனர். எனவே,

வாதி, வழக்கு சொத்துக்களை அமைதியாக அனுபவிக்க கோரியும், பிரதிவாதிகளின் சட்டவிரோத செயல்களைத் தடுக்க வேண்டியும் வாதி தரப்பில் வழக்கு தாக்கல்.

3. <u>2ஆம் பிரதிவாதியால் தாக்கல் செய்யப்பட்டு 1 , 3 மற்றும் 5 பிரதிவாதிகளால் ஏற்றுக்கொள்ளப்பட்ட எதிர்வழக்குரையின் சுருக்கம்</u>:

பிராதில் கூறியுள்ள சங்கதிகள் மறுக்கப்படுகிறது. தாவா சொத்துக்கள் வாதிக்கு பாத்தியப்பட்டது அல்ல. வாதி பிராதில் கூறும் 20.05.1974 மற்றும் 12.08.1985 ஆகிய தேதிகளில் கண்ட கிரயப்பத்திரங்கள்

PADMANABAN VENKATASAMY
Prinicial District Judge,
Digitally signed by PADMANABAN VENKATASAMY
Location: Perambalur.
Date: 2026.04.29 20:49:05 +0530

இந்த பிரதிவாதிகளை கட்டுப்படுத்தாது. தாவா சொத்துக்கள் வாதியின் சுவாதீனத்திலும், அனுபோகத்திலும் இல்லை. தாவா 1வது அயிட்ட சொத்து பக்கீர் மானியம். அது தமிழ்நாடு வக்ப் வாரியத்தின் நிர்வாகத்திலும், சுவாதீனத்திலும் இருந்து வருகிறது. தமிழ்நாடு வக்ப் போர்டை இந்த வழக்கில் ஒரு பார்ட்டியாக சேர்க்கவேண்டும். மேற்படி காரணத்தினால் அவசிய தரப்பினரை சேர்க்காத காரணத்தினால் தாவா தோஷத்திற்கு உள்ளாகிறது. தாவா சொத்துக்கள் வாதிக்கு பாத்தியப்பட்டதென்பதும், வாதியின் அனுபவத்தில் உள்ளது என்பதும் பொய். தாவா சொத்தினை 1ஆம் பிரதிவாதி விலைக்கு கேட்டார் என்று பிராதில் கூறுவது பொய். வாதிக்கு பிரதிவாதிகள் பெயரில் எவ்வித வியாஜ்ஜிய மூலமும் இல்லை. தாவா சொத்துக்களைப் பொறுத்து வாதியின் உரிமை மறுக்கப்படுவதால் நிரந்தர ஊறுத்துக் கட்டளை கோரி கொடுக்கப்பட்டுள்ள இந்த தாவா சட்டபடி செல்லாது. ஆகவே, வாதியின் வழக்கினை இப்பிரதிவாதிகளின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட வேண்டும்.

<u>4. 6ஆம் பிரதிவாதியால் தாக்கல் செய்யப்பட்ட எதிர்வழக்குரையின் சுருக்கம்</u>:

பிராதில் கூறியுள்ள சங்கதிகள் மறுக்கப்படுகிறது. 1 முதல் 3 மற்றும் 5 பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர்வழக்குரையில் கூறியுள்ள சங்கதிகளையே இப்பிரதிவாதியும் தனது எதிர்வழக்குரையில் கூறி வாதியின் வழக்கினை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்று கூறியுள்ளார்.

<u>5. வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட பதில் வழக்குரையின் சுருக்கம்</u>:

தாவா சொத்துக்கள் தமிழ்நாடு வக்ப் போர்டின் சுவாதீனத்தில் உள்ளது என்று கூறுவது பொய்யானது. வழக்குச் சொத்துக்கள் எந்த வக்ப் (WAKF) நிறுவனத்திற்குச் சொந்தமானவை என்பதைப் பிரதிவாதிகள் தரப்பில்

PADMANABAN VENKATASAMY
Prinicial District Judge,
Digitally signed by
PADMANABAN VENKATASAMY
Location: Perambalur.
Date: 2026.04.29 20:44:13 +0530

குறிப்பிடவில்லை. மேலும், அச்சொத்துக்கள் ஒரு குறிப்பிட்ட வக்ப் நிறுவனத்திற்குச் சொந்தமானவையாக அமைவதற்கு அடிப்படையாகக் கூறப்படும் வக்ப் பத்திரத்தைப் (WAKF nama) குறித்தும் அவர்கள் எதையும் குறிப்பிடவில்லை. இது தொடர்பாக, பிரதிவாதிகளின் எழுத்துப்பூர்வ வாக்குமூலத்தில் எவ்விதக் குறிப்பும் அளிக்கப்படவில்லை. வாதியும், தாவா சொத்துக்களை பொறுத்த முன் பாத்தியஸ்தர்களும் வழக்குச் சொத்துக்களைத் தொடர்ச்சியாகவும், அனைவரின் அறிதலோடும் மற்றும் உரிமையின் அடிப்படையிலும், அமைதியாக அனுபவித்து, தங்கள் உடைமையில் வைத்திருந்துள்ளனர். இதன் விளைவாக, வாதி அச்சொத்துக்களின் மீதான உரிமையைச் சட்டபூர்வமாகப் பெற்றுள்ளார். வழக்குச் சொத்துக்களின் மீது பிரதிவாதிகளுக்கோ, அல்லது தமிழ்நாடு வக்பு வாரியத்திற்கோ எவ்வித உரிமையும் கிடையாது.

மேற்படி தாவா சொத்துகுறித்து ஆவணம் சமர்ப்பிக்கப்பட்டால், அது உண்மையானது அல்ல. வழக்குச் சொத்துக்களை கிரையம் பெற்ற வாதியும், வாதியின் முன் பாத்தியஸ்தர்களும் வழக்கு சொத்துக்களை அமைதியாகவும், நீண்ட காலமாகவும், தொடர்ச்சியாகவும் அனுபவித்து வந்ததன் அடிப்படையில், பிறருக்கு ஏதேனும் உரிமைகள் இருந்திருப்பின், அவை காலப்போக்கில் காலாவதியாகி அற்றுப்போயுள்ளன. வழக்குத் தொடரப்படுவதற்கு முந்தைய 12 ஆண்டுகளுக்குள், பிரதிவாதிகள் எவரும் இவ்வழக்குச் சொத்துக்களை ஆக்கிரமித்து அனுபவித்திருக்கவில்லை. எனவே, வாதி கோரிய பரிகாரம் வாதிக்கு கிடைக்கப்படவேண்டும்.

<u>6. 7ஆம் பிரதிவாதியால் தாக்கல் செய்யப்பட்ட எதிர்வழக்குரையின் சுருக்கம்</u>:

பிராதில் கூறியுள்ள சங்கதிகள் மறுக்கப்படுகிறது. வழக்கின் 1வது இன சொத்து வாதிக்கு சொந்தமானது அல்ல. 20.05.1974 மற்றும் 12.08.1985

PADMANABAN VENKATASAMY

Prinicial District Judge,
Digitally signed by PADMANABAN VENKATASAMY
Location: Perambalur.
Date: 2026.04.29 20:44:16 +0530

ஆகிய தேதிகளில் ஏற்பட்டதாக கூறும் கிரயப்பத்திரங்கள் இப்பிரதிவாதியை கட்டுப்படுத்தாது. வழக்குச் சொத்துக்களின் 1வது இனத்தை மற்றவர்களுக்கு விற்பனை செய்து கொடுப்பதற்கான உரிமை, வாதியின் விற்பனையாளர்களுக்கோ அல்லது அவருக்கு முன்னிருந்த பாத்தியஸ்தர்களுக்கோ இல்லை. வழக்குச் சொத்துக்களின் 1வது இனம் தொடர்பாக, பட்டா புத்தகம் வாதிக்கு எவ்வித உரிமையையும் வழங்காது. பலமுறை முறையீடுகள் செய்யப்பட்ட பின்னரும், சிட்டா பதிவேட்டில் உள்ள தவறான பதிவுகளை சரிசெய்வதற்கு, வருவாய்த் துறை அதிகாரிகள் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை. வழக்குச் சொத்துக்களின் 1வது இனத்தின் மீது வாதியின் விற்பனையாளருக்கு எவ்வித உரிமையும் இல்லாத நிலையில், வெறும் நிலவரி (Kist) செலுத்துவதினால் மட்டும் வாதிக்கு வழக்குச் சொத்துக்களின் மீது எவ்விதச் செல்லுபடியாகும் உரிமையையும் வழங்காது. வாதியானவர், பிரதிபலன் செலுத்தி, முகாந்திரம் ஏதுமின்றிச் சொத்தை வாங்கிய ஒரு 'நன்னம்பிக்கையுள்ள வாங்குநர்' (Bonafide purchaser) என்று கூறுவது முற்றிலும் தவறானது. வழக்குச் சொத்துக்களின் 1வது இனம் வாதியின் உடைமையிலோ அல்லது அனுபவத்திலோ இல்லை.

தாவா சொத்துக்களின் 1வது இனம் மண்டேஜாபத்தேஜா வக்ப்பின் சொத்து. அது உள்ளூரில் பக்கீர் மானியம் என்று அழைக்கப்படுகிறது. மேற்படி சொத்துக்களில் தாவா 1வது அயிட்ட சொத்து இப்பிரதிவாதியின் கட்டுப்பாட்டில் இருந்து, 4ஆம் பிரதிவாதிக்கு குத்தகைக்கு விடப்பட்டு அவருடைய அனுபவத்தில் உள்ளது. எனவே, வழக்குச் சொத்துக்களை வாங்குவதற்காகப் பிரதிவாதிகள் வாதியுடன் போட்டியிட வேண்டிய அவசியம் இல்லை. ஆகவே, வழக்கு சொத்துக்கள் கிரையம் வாங்கிய வகையில் வாதிக்கு அனுபவமோ, பாத்தியமோ கொண்ட சொத்து ஆகாது.

அரியலூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்ற அசல் வழக்கு எண்.404/1973– வழக்கில், தாவா 1வது அயிட்ட சொத்தினை பொறுத்து

PADMANABAN VENKATASAMY
Prinicial District Judge,
Digitally signed by PADMANABAN VENKATASAMY
Location: Perambalur.
Date: 2026.04.29 20:44:20 +0530

வாதியின் முன்னவராகிய கருப்பாயி அம்மாளுக்கு எதிராக வழக்குச் சொத்துக்களின் 1வது இனத்தின் உடைமை கோரி 07.08.1973 அன்று தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டதன் அடிப்படையில், 16.12.1980 அன்று இப்பிரதிவாதியிடம் அச்சொத்தின் உடைமை ஒப்படைக்கப்பட்டது. மேற்படி விசயங்கள் அனைத்தும் வாதிக்கு தெரியும். அது வாதியை கட்டுப்படுத்தும். வழக்கு 1வது இன சொத்து தொடர்பாக இப்பிரதிவாதிக்கு எதிராக எந்தவிதமான வழக்குக் காரணமும் எழவில்லை. மேலும், வாதி கூறும் வழக்கு காரணம் முற்றிலும் பொய்யானது. எனவே, வாதியின் வழக்கினை இப்பிரதிவாதியின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட வேண்டும்.

7. 6ஆம் பிரதிவாதியால் தாக்கல் செய்யப்பட்டு மற்ற பிரதிவாதிகளால் ஏற்றுக்கொள்ளப்பட்ட கூடுதல் எதிர்வழக்குரையின் சுருக்கம்:

தாவா சொத்துக்கள் இரண்டும் வாலிகண்டபுரத்தில் உள்ள மண்டேஜா, பத்தேஜா வக்புக்கு பாத்தியப்பட்டது. அதன் டி.டி.நம்பர் 1325 அந்த வக்பு சொத்துக்களை கிரையம் செய்ய யாருக்கும் உரிமையில்லை.

தாவா 1வது அயிட்ட சொத்து பொறுத்து வாதியின் முன் பாத்தியஸ்தரரான கருப்பாயி அம்மாளுக்கு எதிராக சுவாதீனம் கோரி அசல் வழக்கு எண்.404/1973 என்ற வழக்கு தொடரப்பட்டு அவ்வழக்கும் 07.08.1973ல் தீர்ப்பாணையாகி, மேற்படி தீர்ப்பாணைப்படி 16.12.1980-ல் சுவாதீனம் எடுத்து பின்னிட்டு 7ஆம் பிரதிவாதி மூலம் 4ஆம் பிரதிவாதிக்கு குத்தகைக்கு விடப்பட்டு அவர் அனுபவத்தில் உள்ளது.

வழக்கு 2வது அயிட்டச் சொத்து ஹவுஸ் சாயவு பெயரில் பெரியல் டி.டி 1325-ல் நம்பர் இனாம் பட்டா ஏற்பட்டுள்ளது. மேற்படி சொத்தினை 7ஆம் பிரதிவாதியின் அனுமதி இல்லாமல் கண்ணையன் ஆசாரிக்கு உசேன் சாயபு, அல்லா பக்ஸ் ஆகியோர் 16.06.1960-ல் கிரையப் பத்திரம் ஏற்படுத்தியுள்ளனர். அது வக்ப் சட்டம் 1954 (29/1954) விதி 36 (எ) படி செல்லாது. மேற்படி, 2வது

PADMANABAN VENKATASAMY
Prinicial District Judge, Digitally signed by PADMANABAN VENKATASAMY Location: Perambalur. Date: 2026.04.29 20:44:28 +0530

அயிட்ட சொத்தினைப் பொறுத்து வாதியிடமிருந்து சுவாதீனம் எடுக்கும் உரிமையை 6, 7 பிரதிவாதிகள் முன்பதிவு (ரிசர்வ்) செய்து கொள்கிறார்கள். எனவே, வாதியின் வழக்கினை பிரதிவாதிகளின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட வேண்டும்.

8. வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட பதில் வழக்குரையின் சுருக்கம்:

6ஆம் பிரதிவாதி தாக்கல் செய்துள்ள கூடுதல் வழக்குரையில் கூறியுள்ள சங்கதிகள் பொய். தாவா சொத்துக்கள் மன்டேஜா பத்தேஜோ வக்ஃபுகருக்கு பாத்தியப்பட்டதாக கூறுவதும், அதற்கு ஏற்கனவே டி.டி.எண்.1325–ல் பட்டா வழங்கப்பட்டதாக கூறுவதும் முற்றிலும் பொய்யானது. மேற்படி சொத்துக்களை எவரும் கிரையம் செய்ய உரிமையில்லை என்று கூறுவது சரியல்ல.

வாதிக்கு கிரையம் செய்ததாக சொல்லும் கருப்பாயி அம்மாள் பெயரில் உள்ள தாவா 1வது அயிட்ட சொத்தைப் பொறுத்து அரியலூர் நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண். 404/1973–ல் வழக்கு வக்ப் வாரியத்திற்கு ஆதரவாக 07.08.1973ல் தீர்ப்பாகி, மேற்படி தீர்ப்பாணையின்படி , 7ம் பிரதிவாதி நீதிமன்றம் மூலமாக சுவாதீனம் பெற்று, 4ம் பிரதிவாதிக்கு குத்தகைக்கு விட்டுள்ளதாக கூறுவதும் பொய்யானது. வாதியைப் பொறுத்தவரை அரியலூர் நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.404/73–ன் வழக்கினைப் பற்றி எதுவும் தெரியாது. வாதி கருப்பாயி அம்மாளிடம் கிரையம் வாங்கவில்லை. உண்மையில் வாதி மாரிமுத்து வகையறாவிடமிருந்து தான் 21.8.85ம் தேதி கிரையத்திற்கு பெற்றிருக்கிறார். வாதிக்கு கிரையம் செய்துள்ளவர்கள் 20.05.1974ஆம் தேதி கிரையம் பெற்றிருக்கின்றனர். 20.05.1974ம் தேதி வாதியின் முன்னாள் பாத்தியஸ்தர்கள் கிரையம் பெறும்பொழுது அரியலூர் நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் இருந்த விபரம் கூறப்படவில்லை. அவ்வழக்கு வாதிக்கோ, வாதியின் கிரையம் முன் பாத்தியஸ்தர்களுக்கோ, அறிவிக்கையின்

PADMANABAN VENKATASAMY
Prinicial District Judge, Digitally signed by PADMANABAN VENKATASAMY Location: Perambalur. Date: 2026.04.29 20:44:32 +0530

மூலமாகவோ அல்லது மற்ற வகையிலோ நிலுவையிலிருந்த வழக்கு பற்றிய விவரம் கூறப்படவில்லை. எனவே வாதியின் கிரையம் முன்னவர்கள் கிரைய சொத்தில் எவ்வித வில்லங்கமும் இல்லை என்று, வாங்கி அனுபவித்து, அதன்பின்னிட்டு 11 வருடங்கள் கழித்து வாதிக்கு கிரையம் செய்துள்ளனர். இந்த நெடிய காலக்கட்டத்தில் 6 மற்றும் 7 பிரதிவாதிகள் தாவா சொத்துக்களில் தங்களுக்கு உரிமை இருப்பதாகவோ அல்லது 4 ம் பிரதிவாதிக்கு குத்தகை உரிமை பெற்று இருப்பதாகவோ எதுவும் கூறவில்லை. தாவா சொத்துக்கள் வாதியின் அனுபோகத்தில் தொடர்ந்து இருந்து வருகிறது. எனவே 20.05.1974ம் தேதி முதல் வாதியின் கிரைய முன் பாத்தியஸ்தர்களும், பின்னிட்டு 21.08.1985ம் தேதி முதல் வாதியும் தாவா சொத்துக்களுக்கு பட்டா பெற்று, வரி வாய்தா செலுத்தி, பயிர் சாகுபடி செய்து வருவதால் வாதிக்கு தாவா சொத்துக்களைப் பொறுத்து அனுபோக பாத்தியமும், எதிருடைமை பாத்தியமும் சித்தித்துவிட்டது.

அசல் வழக்கு எண்.404/1973ல் அரியலூர் நீதிமன்றத்தில் வழங்கப்பட்டுள்ள தீர்ப்பு சட்டப்படிக்கு அமுலாக்கம் செய்யத்தக்கதல்ல. அந்த தீர்ப்பாணையானது இல்லா நிலைமை உடையதாகும். வாதத்திற்காக மேற்படி சொத்துக்கள் எதிர்வழக்குரையில் கூறப்பட்ட வக்ஃபுகளுக்கு பாத்தியப்பட்டது என்று வைத்துக்கொண்டாலும் அச்சொத்துக்கள் ஊழிய மானிய நிலங்களாகும். ஊழிய மானிய நிலங்களைப் பொறுத்து கிரையம் செய்தோர் பராதீனம் செய்வதற்கு உரிமையுண்டு. இதன் அடிப்படையில் கருப்பாயி அம்மாளுக்கு மேற்படி சொத்துக்கள் பாத்தியப்பட்டிருக்கையில் கருப்பாயி அம்மாளுக்கு கிரையம் செய்தவர்கள், மேற்படி வக்ஃபுகளுக்கு ஊழியம் செய்திருந்தாலும் அவைகளை ஊழியம் செய்தோர் கிரையம் செய்ய உரிமையுண்டு. இச்சங்கதி இப்பால் தெரிகிறபடி கருப்பாயி அம்மாளால் அரியலூர் நீதிமன்றத்திற்கு தெரியப்படுத்தப்படவில்லை. எனவே, அரியலூர் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பானது இனாம் ஒழிப்பு சட்ட விதிகளுக்கு முரணாகவுள்ளது. எனவே சட்ட

PADMANABAN VENKATASAMY
Prinicial District Judge, Digitally signed by PADMANABAN VENKATASAMY
Location: Perambalur.
Date: 2026.04.29 20:44:36 +0530

விதிகளுக்கு முரணாக வழங்கப்பட்டுள்ள தீர்ப்பானது சட்டப்படிக்கு இல்லா நிலைமை உடையதாகும். எனவே அந்த தீர்ப்பின் அடிப்படையில் 6, 7 பிரதிவாதிகள் உரிமை கோருவதற்கு எவ்வித உரிமையும் இல்லை. தாவா 1வது அயிட்ட சொத்தைப் பொறுத்து 6 மற்றும் 7 பிரதிவாதிகள் நீதிமன்றம் மூலமாக சுவாதீனம் பெற்றுக்கொண்டுவிட்டதாக கூறுவது பொய்யானது. அவ்வாறு சுவாதீனம் வாதிக்கு கிரையம் செய்தவர்களால் வழங்கப்படவில்லை. சுவாதீனம் ஆனதாக கூறுவதற்கு ஆதாரங்கள் காண்பிக்கப்பட்டால், அவை பேப்பர் டெலிவரிதானே தவிர உண்மையான சுவாதீனம் அல்ல. எனவே, வாதிக்கு தாவா சொத்துக்களை பொறுத்து, கிரையம் மூலமாகவும், அனுபோக பாத்தியம் மூலமாகவும் பாத்தியம் சித்தித்துவிட்டபடியால், வாதி கோரியுள்ளபடி பரிகாரம் வழங்கப்படவேண்டும்.

9. மேற்படி வழக்குரை, எதிர்வழக்குரைகள், கூடுதல் எதிர்வழக்குரை மற்றும் பதில் வழக்குரைகள் ஆகியவைகளை பரிசீலனை செய்தபின்னர் கீழமை நீதிமன்றத்தில் கீழ்க்கண்ட எழுவினாக்கள் வனையப்பட்டுள்ளது:

1. வழக்கு சொத்துக்கள் வாதிக்கு பாத்தியமா?
2. வழக்கு சொத்துக்கள் மண்டேஜாபத்தேஜா வக்ப்பின் சொத்துக்களா?
3. வழக்கு சொத்துக்கள் வாதியின் அனுபவத்தில் உள்ளதா?
4. வழக்கு சொத்துக்கள் 6, 7 பிரதிவாதிகள் குறிப்பிடும் இந்த 4ஆம் பிரதிவாதியின் அனுபவத்தில் உள்ளதா?
5. வழக்கு சொத்துக்களில் வாதிக்கு அனுபவ பாத்தியம் உள்ளதா?
6. அரியலூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண். 404/1973–ன் தீர்ப்பாணை இவ்வழக்கினை பாதிக்காதா?
7. சொத்துரிமை விளம்புகையும், உறுத்துக் கட்டளையும் வாதிக்கு கிடைக்கக்கூடியதா?

PADMANABAN VENKATASAMY

Prinicial District Judge,
Digitally signed by PADMANABAN VENKATASAMY
Location: Perambalur.
Date: 2026.04.29 20:44:40 +0530

8. வாதிகளுக்கு கிடைக்கக்கூடிய இதர பரிகாரங்கள் என்ன?

10. வாதி தரப்பில் வா.சா.1 முதல் 3 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, வா.சா.ஆ.1 முதல் 54 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. பிரதிவாதிகள் தரப்பில் பி.சா.1 மற்றும் பி.சா.2 வரை விசாரிக்கப்பட்டு, பிசா.ஆ.1 முதல் 13 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

11. மேற்படி சாட்சியங்கள், ஆவணங்கள் மற்றும் இருதரப்பு வாதுரைகளை கேட்டறிந்த பின்னர், முடிவில் விசாரணை நீதிமன்றம், வாதியின் வழக்கை செலவுத்தொகையின்றி தள்ளுபடி செய்து தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை பிறப்பித்துள்ளது. மேற்படி தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணையில் குறைவுற்ற வாதியால் இந்த மேல்முறையீடும், 6,7 பிரதிவாதிகளால் குறுக்கு மேல்முறையீடும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. ஏற்கனவே மேல்முறையீட்டாளருக்கு 31.01.2002ஆம் தேதியிட்ட மேல்முறையீட்டு வழக்கு எண்.62/2000–ல் இந்நீதிமன்றம் இடைநிலை மனு எண்.48/2000ல் குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களை பொறுத்து சாட்சிகளை விசாரிக்கவும், அவற்றை குறியீடு செய்யவும் சந்தர்ப்பம் வழங்கவேண்டி கீழமை நீதிமன்றத்தில் பிறப்பித்த தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை நீக்கரவு செய்யப்பட்டு மீண்டும் மறுவிசாரணைக்காக கீழமை நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட வேண்டும் என்றும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. அதன்பின்னிட்டு, இம்மேல்முறையீட்டாளர்கள் தரப்பில், மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்த சிஎம்ஏ.எண்.1860/2002 மற்றும் சிஎம்பி.எண்.16835/2002 வழக்கில், மாண்புமிகு உயர்நீதிமன்றம் 19.12.2023 அன்று பிறப்பித்த உத்தரவில் இரு தரப்பினர்களுக்கும் கூடுதல் ஆவணங்கள் தாக்கல் செய்வதற்கும், சாட்சிகளை விசாரணை செய்வதற்கும் கால அவகாசம் அளித்து, தீர்வு காண மேல்முறையீட்டு வழக்கு எண்.62/2000– ஐ மீள

PADMANABAN VENKATASAMY
Prinicial District Judge, Digitally signed by PADMANABAN VENKATASAMY Location: Perambalur, Date: 2026.04.29 20:44:44 +0530

அனுப்புதல் (Remand) செய்து உத்தரவிட்டுள்ளது. அதன் அடிப்படையில், இந்நீதிமன்றத்தில் வாதி தரப்பில் கூடுதல் நிரூபண பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்யப்பட்டு, வா.சா.ஆ55 ஆவணம் குறியீடு செய்யப்பட்டு, வா.சா.1 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணையும் செய்யப்பட்டுள்ளார். பிரதிவாதிகள் தரப்பில், பி.வா.சா.2 தரப்பில் கூடுதல் நிரூபண பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்யப்பட்டு, பி.வா.சா.ஆ14 ஆவணம் குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேலும் பிரதிவாதிகள் தரப்பில் 18 ஆம் பிரதிவாதி பி.வா.சா.3 ஆக விசாரணை செய்யப்பட்டு, பி.வாச..2 மற்றும் 3 வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டுள்ளனர்.

12. மேல்முறையீட்டின் தீர்வின் வசதிக்காக தரப்பினர்கள் விசாரணை நீதிமன்றத்தில் அழைக்கப்பட்டது போல் இம்மேல்முறையீட்டிலும் அழைக்கப்படுகிறார்கள்.

13. <u>மேல்முறையீட்டாளர்கள்/வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மேல்முறையீட்டிற்கான காரணங்களின் சுருக்கம்</u>:-

**கீழமை நீதிமன்றத்தின் தீர்ப்பு மற்றும் தீர்ப்புரை சட்டத்திற்கும், இயற்கை நீதிக்கும் புறம்பானது. கீழமை நீதிமன்றம் வாதி தாக்கல் செய்துள்ள ஆவணங்களையும், சாட்சியங்களையும் முழுமையாக பரிசீலிக்காமல் தீர்வு கண்டுள்ளது சட்டப்படி ஏற்புடையதல்ல.**

**விசாரணை நீதிமன்றம் 6 மற்றும் 7 பிரதிவாதிகள் தரப்பில் எழுப்பப்படாத, விடுபட்ட காரணங்களின் (Technical grounds) அடிப்படையில் வழக்கை தள்ளுபடி செய்திருக்கக் கூடாது. அது சம்மந்தமான எழுவினா எதுவும் வினவப்படவில்லை.**

**தாவா 1வது இலக்க சொத்தானது வாதிகளின் முன் பாத்தியஸ்தர்களின் அனுபவத்தில் இருந்தது என்று தீர்வு கண்டுள்ள நிலையில்,**

PADMANABAN VENKATASAMY
Prinicial District Judge,
Digitally signed by PADMANABAN VENKATASAMY
Location: Perambalur.
Date: 2026.04.29 20:44:48 +0530

அதே போன்று, 2வது இலக்க சொத்தும் வாதிகளின் முன் பாத்தியஸ்தர்களின் அனுபவத்திலும் இருந்து வந்தள்ளது என்று தீர்வு கண்டுள்ள நிலையில், வாதிக்கு ஆதரவாக தீர்ப்பும், தீர்ப்பாணையும் பிறப்பித்து இருக்க வேண்டும்.

அசல் வழக்கு எண். 404/1973–ல் தாவா சொத்தானது வக்ஃப் சட்டப்படி ஒப்படைக்கப்பட்டது பெயரளவில் ஏற்பட்டது என்று விசாரணை நீதிமன்றம் தீர்மானித்துள்ள நிலையில், வழக்கு தள்ளுபடி செய்து இருக்ககூடாது. வக்ஃப் சட்டம் 1956–ன் கீழ் அறிவிப்பு குறித்து எந்தவித எதிர்வாதமும், 6 மற்றும் 7 பிரதிவாதிகள் தரப்பில் குறிப்பிடப்படாத நிலையில், அது சம்மந்தமாக மேற்படி பிரதிவாதிகளுக்கு ஆட்சேபணை இல்லை என்று தீர்மானித்திருக்கவேண்டும். வக்ஃப் சட்டம் 1956 சம்மந்தமாக எந்தவித குறிப்பான எழுவினா எதுவும் வனையப்படாத நிலையில், அது குறித்து 7வது பிரதிவாதி தரப்பில் எந்தவித எதிர்வாதமும் குறிப்பிடாத நிலையில், மேற்படி அறிவிப்பு அனுப்பாததால், பிராது நிலைக்கத்தக்கதல்ல என்று விசாரணை நீதிமன்றம் தீர்மானித்துள்ளது தவறானது ஆகும்.

மைனர் இனாம் ஒழிப்புச் சட்டத்தின்கீழ் தாவாச் சொத்துக்களுக்கு வாதிகளின் முன் பாத்தியஸ்தரான கருப்பாயி அம்மாள் பெயருக்கு சட்டப்படி பாத்தியம் உள்ள நிலையில், வக்ஃப் சட்டம் 1956–ன் கீழ் எந்தவித உரிமையும் கோர முடியாது. வழக்கு சொத்துக்கள் வாதிகள் அனுபவத்தில் உள்ளதையும், வழக்கு சொத்துக்களுக்கான உரிமை மூல ஆவணங்களான கிரைய பத்திரம், பட்டா, வீட்டுவரி ரசிதுகள் ஆகியவைகள் ஆரம்பம் முதலே நாளதுவரை இந்த வாதிகள் பெயரில் உள்ளதையும் கீழமை நீதிமன்றம் பரிசீலிக்க தவறிவிட்டது. எனவே, இம்மேல்முறையீடு செலவுத்தொகையுடன் அனுமதிக்கப்பட வேண்டும்.

14. குறுக்கு மேல்முறையீட்டாளர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள குறுக்கு மேல்முறையீட்டு விபரக் குறிப்பின் சுருக்கம்:–

கீழமை நீதிமன்றம் வாய்மொழி மற்றும் ஆவண சாட்சியங்களை சரியான

PADMANABAN VENKATASAMY
Prinicial District Judge,
Digitally signed by PADMANABAN VENKATASAMY
Location: Perambalur.
Date: 2026.04.29 20:44:52 +0530

முறையில் பரீசீலிக்காமல் 1 முதல் 8 எழுவினாக்களுக்கும் இணைத்தே ஒரு குழப்பமான சூழ்நிலையில் இந்த குறுக்கு மேல்முறையீட்டாளர்களுக்கு பாதகமாக தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணையை பிறப்பித்துள்ளது,

கீழமை நீதிமன்றம் புரபாாமா நோட்டீசிலும், கெஜட் நோட்டிபிகேசனிலும் வழக்கிடைச் சொத்துக்கள் மண்டேஜா, பத்தேஜா வக்ப்புக்கு பாத்தியப்பட்டது என்று குறிப்பிடப்பட்டுள்ள போதிலும், அனைத்து எழுவினாக்களுக்கும் சேர்த்து ஒரு குழப்பமான சூழ்நிலையில் விடை கண்டுள்ளது சரியல்ல,

கீழமை நீதிமன்றம் வழக்கிடைச் சொத்துக்கள் மண்டேஜா, பத்தேஜா வக்ப்புக்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள் என வழக்கின் எழுவினா 2–ற்கு சரியான முடிவை எய்தியுள்ளது என்றும், ஏற்கனவே பெரம்பலூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கிடைச் சொத்துக்களைப் பொறுத்து அசல் வழக்கு எண். 404/73ல் 16.12.1980ம் தேதியில் மேற்படி சொத்துக்கள் வக்ப் வாரியத்திற்கு பாத்தியப்பட்டது என தீர்ப்பும், தீர்ப்பாணையும் ஏற்பட்டுள்ளதையும், மேற்படி தீர்ப்பினை அனுசரித்து, மேற்படி சொத்துக்கள் நீதிமன்றம் மூலம் டெலிவரி எடுக்கப்பட்டுள்ளதைப் பொறுத்தும் கீழமை நீதிமன்றம் அது வெறும் காகித டெலிவரி என்றும், அது செல்லத்தக்கதல்ல என்றும் கண்டுள்ள முடிவு முறையற்றது.

கீழமை நீதிமன்றம் ஏற்கனவே வழக்கு தொடரப்பட்டு தீர்ப்பாணை பெறப்பட்ட சொத்துக்களைப் பொறுத்து மறுபடியும் வாதி வழக்கை தாக்கல் செய்து பரிகாரங்கள் கோர முரண்தடை தோஷத்தால் பாதிக்கப்பட்டுள்ளார் என்பதனை காணத் தவறியுள்ளது,

கீழமை நீதிமன்றம் பி.சா.ஆ.3 ஆவணத்தின் மூலமாக 08.03.84ல் வழக்கிடை குத்தகைக்கு விடப்பட்டுள்ளன என்பதனைக் காணத் தவறியுள்ளது என்றும், மேற்படி ஆவணத்தில் காணப்படும் ஒரு சில எழுத்துப்பிழைகளைப் பயன்படுத்தி மேற்படி ஆவணம் வழக்கிற்காக ஏற்படுத்தப்பட்ட (செல்ப் சர்விங் டாக்குமெண்ட்) என கண்டுள்ள முடிவு முறையற்றது.

PADMANABAN VENKATASAMY
Prinicial District Judge, Digitally signed by PADMANABAN VENKATASAMY
Location: Perambalur.
Date: 2026.04.29 20:44:56 +0530

இக்குறுக்கு மேல்முறையீட்டாளர் தரப்பில் முன்னிடப்பட்டுள்ள ஆவண சாட்சியங்கள், வழக்கிடைச் சொத்துக்கள் இக்குறுக்கு மேல்முறையீட்டாளர்களின் சுவாதீனத்தில் உள்ளது என்பதனை தெளிவாக நிரூபிக்கும் வகையில் அமைந்துள்ளது என்றும், ஆனால் மேற்படி சொத்துக்களின் சுவாதீனத்தைப் பொறுத்து கீழமை நீதிமன்றம் கண்டுள்ள முடிவு முறையற்றது.

கீழமை நீதிமன்றம் எழுவினா எண்.4ற்கு கண்டுள்ள முடிவு சரியானதல்ல. கீழமை நீதிமன்றம் எழுவினா 3ற்கு விடை காணும்பொழுது அனுபவ சுவாதீனம் பொறுத்து கண்டுள்ள முடிவு முறையற்றதாக அமைந்துள்ளது.

கீழமை நீதிமன்றம் எழுவினா எண்.6ற்கு இந்த குறுக்கு மேல்முறையீட்டாளர்களுக்கு சாதகமாக விடை கண்டிருக்கவேண்டும்.

கீழமை நீதிமன்றம் எழுவினாக்கள் 1 முதல் 5–ற்கு கண்டுள்ள முடிவு முறையற்றதாக உள்ளது. எனவே, அசல் வழக்கு எண்.616/85ல் கீழமை நீதிமன்றம் 28.08.95ம் தேதி பிறப்பித்துள்ள தீர்ப்புரையில் அனுபவ சுவாதீனம் பொறுத்து கண்டுள்ள முடிவை மாற்றியமைத்து இக்குறுக்கு மேல்முறையீடு அனுமதிக்கப்படவேண்டும்.

<u>15. இம்மேல்முறையீட்டில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சினைகள் யாதெனில்</u>

1. தாவா சொத்துக்கள் வாதிகளுக்கு பாத்தியப்பட்டு வாதிகளின் அனுபவத்தில் உள்ளதா?

2. இம்மேல்முறையீடு அனுமதிக்கப்பட்டு விசாரணை நீதிமன்றத்தின் தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை ரத்து செய்யத்தக்கதா?

3. குறுக்கு எதிர்மேல்முறையீட்டாளர்களாகிய 6 மற்றும் 7 பிரதிவாதிகள் கோரிய பரிகாரம் அவர்களுக்கு கிடைக்கத்தக்கதா?

PADMANABAN VENKATASAMY
Prinicial District Judge, Digitally signed by PADMANABAN VENKATASAMY Location: Perambalur. Date: 2026.04.29 20:45:01 +0530

16. பிரச்சினை எண் : 1

தாவா சொத்துக்களை 1ஆம் வாதி அவருடைய முன் சுவாந்தர்களிடம் கிரையம் பெற்று அனுபவம் செய்து வந்து அவர் இறந்தபின்பு அவருடைய வாரிசுகளான மற்ற வாதிகள் அனுபவம் செய்து வருகிறார்கள் என்பதும், தாவா சொத்துக்களின் முன் சுவாந்தர்கள் பெயரிலும், 1ஆம் வாதியின் பெயரிலும் வருவாய் துறையில் பட்டாக்கள் ஏற்படுத்தப்பட்டு தொடர்ச்சியாக கிஸ்து வரி செலுத்தி அனுபவம் செய்து வருகிறார்கள் என்பதும் வாதிகள் தரப்பு வழக்கு.

17. தாவா சொத்துக்களானது வக்பு சொத்து என்பதும், அதில் வாதிகளுக்கு எவ்வித பாத்தியமும், அனுபவமும் கிடையாது என்பதும், ஏற்கனவே வாதியின் முன் பாத்தியஸ்தரான கருப்பாயி அம்மாளுக்கு எதிராக 7ஆம் பிரதிவாதி அரியலூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் சுவாதீன பரிகாரம் கோரி மு.வ.எண்.404/1973 ல் வழக்கு தாக்கல் செய்து 7ஆம் பிரதிவாதிக்கு ஆதரவாக தீர்ப்பாகி, அதன்பின்னர் நிறைவேற்று மனு தாக்கல் செய்து தாவா சொத்துக்களுக்கு சுவாதீனம் பெற்றுள்ளார்கள் என்பது பிரதிவாதிகள் தரப்பு வழக்காக உள்ளது.

18. 1ஆம் வாதி, வா.சா.1 ஆக சாட்சியம் அளித்துள்ளார். அவர் தன்னுடைய சாட்சியத்தில் குறிப்பாகவும், தெளிவாகவும் தாவா சொத்துக்களை மாரிமுத்து வகையறாவிடமிருந்து வா.சா.ஆ.1 கிரையபத்திரத்தின்படி 12.08.1985ஆம் தேதி கிரையம் பெற்ற அன்று முதல் அனுபவம் செய்து வருவதாகவும், மேற்படி மாரிமுத்து தாவா கிரைய சொத்துக்களை 12.09.1977ஆம் தேதி ரெங்கநாதன் என்பவரிடம் வாசாஆ.28 கிரைய பத்திரத்தின் மூலம் கிரையம் பெற்று அனுபவம் செய்து வந்தார் என்றும், மேற்படி கிரைய முன் பாத்தியஸ்தரான ரெங்கநாதன் தாவா சொத்துக்களை

PADMANABAN VENKATASAMY
Prinicial District Judge,
Digitally signed by PADMANABAN VENKATASAMY
Location: Perambalur.
Date: 2026.04.29 20:45:05 +0530

கருப்பாயி அம்மாள் என்பவரிடமிருந்து 20.05.1974ஆம் தேதி வா.சா.ஆ.2 கிரையபத்திரம் மூலம் கிரையம் பெற்று அனுபவம் செய்து வந்ததாகவும், அதற்கு முன்பு மேற்படி கருப்பாயி அம்மாள் 09.09.1943ஆம் தேதி வா.சா.ஆ.38 கிரையப்பத்திரம் மூலம் காதர்பீ அம்மாள் மற்றும் கௌஸ் சாகிப் ஆகியோரிடமிருந்து வழக்கு சொத்துக்களை கிரையம் பெற்று அனுபவித்து வந்தார்கள் என்றும், அவர்கள் பெயரில் வருவாய்த்துறை மூலம் ஏற்படுத்தப்பட்ட செட்டில்மெண்ட் வா.சா.ஆ.17 மற்றும் வா.சாஆ.19 என்றும், தாவா சொத்துக்களை கிரையம் பெற்றதற்கு பின்னர் வாதியின் பாத்தியத்தை அனுசரித்து, வா.சா.ஆ.18 செட்டில்மெண்ட் பத்திரம் ஏற்படுத்தப்பட்டது என்றும், மேலும் வா.சா.ஆ.21 சிட்டா, வா.சா.ஆ.22 பட்டா பாஸ் புத்தகம் என்றும், வாதியின் பெயரில் வா.சா.ஆ. 44 முதல் 46 வரை அடங்கல் பதிவு ஏற்பட்டுள்ளது என்றும், வாசா.ஆ.30 முதல் 37 வரை கிஸ்தி வரி செலுத்தி இருக்கிறார் என்றும், வாதியின் முன் பாத்தியஸ்தரான மாரிமுத்து கவுண்டர் பெயரில் பட்டா பெற்று, வாய்தா செலுத்தி வந்தார் என்பதற்கான சாகுபடி அடங்கல் கணக்குகள் வா.சா.ஆ.12 முதல் 16 வரையிலும், வா.சா.ஆ.20 சிட்டா, வா.சா.ஆ.23 முதல் 27 வாய்தா இரசீதுகள் மற்றும் வா.சா.ஆ. 40 முதல் 47 சாகுபடி அடங்கல் கணக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், மேலும் மாரிமுத்துவின் முன் பாத்தியஸ்தரான ரெங்கநாதன் தாவாச் சொத்துக்களுக்கு பட்டா பெற்று அனுபவம் செய்து வந்தார் என்பதற்கான சாகுபடி அடங்கல் கணக்குகள் வா.சா.ஆ. 3 முதல் 11 ஆகியவைகளும் தாக்கல் செய்திருப்பதாக குறிப்பாகவும், தெளிவாகவும் சாட்சியம் அளித்துள்ளார். வா.சா.1ன் சாட்சியத்தை அனுசரித்து, அவருடைய பக்கத்து நிலத்துக்காரர் வாசா.2ஆக சையத் கவுஸ் என்பவர் சாட்சியம் அளித்துள்ளார். அவர் தனது சாட்சியத்தில், தாவா சொத்தை வாதி அனுபவம் செய்து வருவதாகவும், அதற்கு முன்பு மாரிமுத்து வகையறாவும், அதற்கு முன்பு கருப்பாயி அம்மாள் என்பவரும் அனுபவம் செய்து வந்ததாகவும் கூறி நீதிமன்றம் ஏற்றுக்கொள்ளத்தக்க வகையில் சாட்சியம் அளித்துள்ளார்.

PADMANABAN VENKATASAMY
Prinicial District Judge,
Digitally signed by PADMANABAN VENKATASAMY
Location: Perambalur.
Date: 2026.04.29 20:45:10 +0530

மேலும், வாதியின் கிரையதாரரான மாரிமுத்துவின் மகன் வா.சா.3 ஆக விசாரிக்கப்பட்டு தாவாச் சொத்துக்களின் முன்பாத்தியதை மற்றும் அனுபவம் குறித்து அளித்துள்ள சாட்சியமும் வா.சா.1–ன் சாட்சியத்தை உறுதியூட்டம் செய்வதாகவே உள்ளது.

19. தாவா சொத்துக்களை வாதி கிரையம் பெறுவதற்கு முன்னர் அவருடைய முன் சுவாந்தர் அவருக்கு முந்தைய முன் பாத்தியஸ்தர்களிடம் தாவா சொத்துக்களை கிரையம் பெற்றார் என்பது மேற்படி சாட்சிய சான்றாவணங்களின் மூலம் தெரியவருகிறது. அதாவது, 1943ஆம் ஆண்டு முதல் கிரையம் பெற்றதற்கு ஆதரவாக ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளார் என்பதும், மேற்படி கிரையப்பத்திரங்களை அனுசரித்து முன் பாத்தியஸ்தர்கள் பெயரிலும், கிரையம் பெற்ற பின்னர் வாதியின் பெயரிலும் தொடர்ந்து பட்டா, சிட்டா, சாகுபடி, அடங்கள் கணக்கு மற்றும் கிஸ்தி போன்ற வருவாய்துறை ஆவணங்கள் ஏற்படுத்தப்பட்டு, தொடர்ந்து அனுபவித்து சாகுபடி செய்து அனுபவித்து வந்தார் என்பதும், மற்றும் அதற்கான கிஸ்து இரசீதுகளும் வாதியின் பெயரில் தொடர்ச்சியான காலங்களில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பதும் தெரியவருகிறது. வா.சா.1ன் சாட்சியத்தின் மூலமும், வாதிகள் தரப்பில் குறியீடு செய்யப்பட்டுள்ள ஆவணங்கள் மூலமும் இவ்வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்னர் தொடர்ச்சியாக சுமார் 40 ஆண்டுகளுக்கு மேலாக தொடர்ந்து அனுபவம் செய்து வந்தார்கள் என்பது தெளிவாகிறது. வாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள முன்பத்திரங்கள் மற்றும் வருவாய் துறையால் வழங்கப்பட்ட ஆவணங்கள் மற்றும் வாதியின் முன் கிரையதாரரின் மகனான வா.சா.3 அளித்த சாட்சியத்தை ஒரு சேர, ஒருங்கிணைத்து பரிசீலனை செய்து பார்க்கும்போது, வாதியின் பிராதிலும், சாட்சியத்திலும் கூறி இருப்பது போன்று தாவா சொத்தை வாதியின் முன் சுவாந்தர்கள் கிரையம் பெற்று தொடர்ச்சியாக அனுபவம் செய்து அதை வாதி கிரையம் பெற்று அனுபவம் செய்து வருகிறார்

PADMANABAN VENKATASAMY
Prinicial District Judge,
Digitally signed by PADMANABAN VENKATASAMY
Location: Perambalur.
Date: 2026.04.29 20:45:14 +0530

என்ற சங்கதியானது இந்நீதிமன்றம் ஏற்றுக்கொள்ளத்தக்கதாகவே உள்ளது. அதுகுறித்து விசாரணை நீதிமன்றம் சரியான கோணத்தில் தீர்மானித்துள்ளது.

20. மேலும், வாதி குறிப்பிடும் தாவா சொத்துக்களின் பாத்தியம் மற்றும் அனுபவம் குறித்து வாதி மற்றும் வாதி தரப்பில் விசாரிக்கப்பட்ட வா.சா.2 மற்றும் வா.சா.3 சாட்சியங்கள் மூலமும், வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்கள் மற்றும் வருவாய்த்துறை ஆவணங்களின் உள்ளடக்கத்தை முற்றிலும் நிராகரிக்கும் அளவிற்கு பிரதிவாதிகள் தரப்பில் எவ்வித அடித்தளமும் உருவாக்கப்படவில்லை.

21. பிரதிவாதிகள் தரப்பில் தாவா சொத்துக்களானது வக்பு சொத்து என்றும், அது பக்கீர் மானியம் என்றும் வாதி மற்றும் தாவா சொத்தின் முன்சுவாந்தர் பெயரில் ஏற்பட்ட பதிவு செய்யப்பட்ட பத்திரங்கள் சட்டப்படி ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல என்று பிரதிவாதிகள் தரப்பில் மறுக்கப்பட்டுள்ளது. ஏற்கனவே, வாதியின் முன் பாத்தியஸ்தரான கருப்பாயி அம்மாளுக்கு அரியலூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில், அசல் வழக்கு எண்.404/1973– வழக்கில் 7ஆம் பிரதிவாதி தாவா சொத்தின் மீது சுவாதீனம் கோரி வழக்கு தாக்கல் செய்யப்பட்டு, அதன்பின்னர் 7ஆம் பிரதிவாதிக்கு ஆதரவாக 07.08.1973ஆம் தேதியில் மேற்படி வழக்கில் தீர்ப்பும் மற்றும் தீர்ப்பாணையும் பிறப்பிக்கப்பட்டும், அதன் பின்னர் நிறைவேற்று மனு தாக்கல் செய்து அதன் நடவடிக்கையின்படி 16.12.1980ஆம் தேதியில் சுவாதீனம் பெற்று 7ஆம் பிரதிவாதியான வக்பு நிர்வாகத்தின் அனுபவத்தில் இருந்ததாகவும், 2வது இலக்க சொத்து, 4ஆம் பிரதிவாதிக்கு குத்தகைக்கு விடப்பட்டுவிட்டது என்றும் பிரதிவாதிகள் தரப்பில் வாதிடப்பட்டது. வாதிகள் தரப்பில் மேற்படி சங்கதிகள் குறித்து கடுமையாக மறுக்கப்பட்டுள்ளது. 7ஆம் பிரதிவாதியின் பெயரில் தாவா சொத்து வக்பு சொத்து என்று குறிப்பாக எதிர்வாதம் செய்து இருந்தாலும், அது

PADMANABAN VENKATASAMY
Digitally signed by PADMANABAN VENKATASAMY
Location: Perambalur.
Date: 2026.04.29 20:45:18 +0530

எப்போது, யார் மூலம், எந்த ஆவணத்தின் மூலம் அது வக்பு சொத்தாக பெறப்பட்டது என்றோ, அவ்வாறு வக்பு ஏற்பட்டதற்கு பின்னர் அது எந்த முறையில், யாரால் நிர்வாகம் செய்யப்பட்டது என்பது குறித்து எந்த ஒரு வலுவான சாட்சியமும் பிரதிவாதிகள் தரப்பில் முன்னிலைப்படுத்தப் படவில்லை.

22. பிரதிவாதிகள் தரப்பில் பி.வா.சா.ஆ.13 ஆக தாக்கல் செய்துள்ள Proforma report–ல் கீழ்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| 4. | Name of the Wakf (Wak Whether Sunni or Shia) | : | Mendasha Fathasa Wakf -Sunni Wakf – It is not known where this Mendasha Fathasa was burried. But there is a Makkan at Tiruchirapalli Municipality ward VI Block. |
| 7. | Object of the Wakf and the conditions of the Grant. | : | The object of the Wakf is for the Preservation and maintenance of the tomb. It is for the Fakeer to make systematic and natural obligations connected with the Islamic theology. |
| 13. | ***Particulars of the Wakf properties comprised in the wakf with title deeds and documents relating the re to description classification extent value of each item.*** | *:* | ***The Wakf Properties were alienated nearly thirty years back.*** |
| 21. | ***How the Wakf is administered at present whether by a scheme settled by Court of Law or by Established custom or usage*** | *:* | ***The Wakf is not administered by any scheme settled by the Court of Law. It is not managed by any body.*** |

PADMANABAN VENKATASAMY Prinicial District Judge, Digitally signed by PADMANABAN VENKATASAMY Location: Perambalur. Date: 2026.04.29 20:45:26 +0530

பி.சா.ஆ.13ல் குறிப்பிட்டுள்ள விவரங்களின் அடிப்படையில் வைத்து பார்க்கும்போது, வக்பு சொத்தாக ஏற்படுத்தப்பட்ட அதாவது மண்டேஜாபத்தேஜா சமாதி எங்கு உள்ளது என்று தெரியவில்லை என்றும், சுமார் 30 ஆண்டுகளுக்கு முன்பே வக்பு சொத்துக்கள் பந்தக பாராயனம் (Alienation) செய்யப்பட்டுவிட்டது என்றும், எந்த ஒரு குறிப்பிட்ட வக்பு போர்டின் கீழும் அது நிர்வாகம் செய்யப்படவில்லை என்று குறிப்பிடப்பட்டுள்ளதின் மூலம் தெளிவாக அறிய முடிகிறது. அதன் அடிப்படையில் வைத்து பார்க்கும்போது, தாவா சொத்துக்கள் 7ஆம் பிரதிவாதியின் அனுபவம் மற்றும் நிர்வாகத்தில் இருக்கவில்லை என்று தெளிவாக அறியமுடிகிறது. மேலும், மேற்படி ஆவணத்தில் தாவா சர்வே எண் குறிப்பிடப்பட்டுள்ளது.

23. பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதுரையின்போது, பக்கீர் மானியம் என்பது வக்பு சொத்து ஆகும் என்று எடுத்துரைத்தார். ஏற்கனவே இந்நீதிமன்றம் தீர்மானித்துள்ளதுபடி, தாவா சொத்து வக்பு எப்போது, யாரால் வழங்கப்பட்டது என்று தீர்மானிக்கப்படாத நிலையில், சமாதியை பாதுகாப்பதற்கும், பராமரிப்பதற்கும் ஏற்படுத்தப்பட்டதாக பி..சா.ஆ.13ல் குறிப்பிடப்பட்டுள்ள நிலையில், அந்த சமாதி எங்கு உள்ளது என்று தெரியாத நிலையில், மேற்படி ஆவணத்தின்படி சுமார் 30 ஆண்டுகளுக்கு முன்பே பந்தகபராதீனம் செய்யப்பட்டு வக்பு நிர்வாகத்தில் இல்லை என்று பதிவு செய்துள்ள சங்கதியை பரிசீலனை செய்து பார்க்கும்போது, தாவா சொத்துக்கள் வக்பு சொத்தாக கருதப்பட்டு, 7ஆம் பிரதிவாதியின் நிர்வாகத்தில் இருந்து வந்ததாக தீர்மானிக்கப்பட முடியவில்லை. அதே சமயத்தில், வாதிகளின் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள தொடர்ச்சியான ஆவணங்களை வைத்து பார்க்கும்போதும், வாதி மற்றும் வாதியின் கிரைய முன் சுவாந்தர்கள் அனுபவத்தில் இருந்துள்ளது என்பதால் தாவா சொத்துக்களின்

PADMANABAN VENKATASAMY
Prinicial District Judge,
Digitally signed by PADMANABAN VENKATASAMY
Location: Perambalur.
Date: 2026.04.29 20:45:30 +0530

உரிமையாளர்கள் என்ற அடிப்படையில் இருந்துள்ளதாக இந்நீதிமன்றம் கருதுகிறது.

24. பி.சா.1 ஆக சாட்சியம் அளித்துள்ள வக்பு ஆய்வாளர் அவருடைய குறுக்கு விசாரணையில், இனாம் ஒழிப்பு சட்டம் வரும்போது, பட்டா நடவடிக்கை எடுக்கப்படாதது குறித்து தனக்கு தெரியாது என்றும், அரசு தங்களிடம் சொத்தை ஒப்படைத்தது என்று தனக்கு தெரியாது என்றும், செட்டில்மெண்ட் நடவடிக்கை எடுக்கப்பட்டது தனக்கு தெரியாது என்றும், ஏற்கனவே அப்துல் கபூர் பக்கீர் மானிய ஊழியராக இருந்தாரா என்று தனக்கு தெரியாது என்றும், தாவா சொத்தை சுவாதீனம் எடுக்கப்படபின்னரும் பட்டா மாற்ற நடவடிக்கை எடுக்காதது குறித்து தனக்கு தெரியாது என்று ஒப்புக்கொண்டு சாட்சியமளித்துள்ளார்.

25. 6 மற்றும் 7 பிரதிவாதிகள் தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதுரையின்போது, தாவா சொத்துக்களுக்கு வக்புதான் உரிமையார் என்று விசாரணை நீதிமன்றம் தீர்மானித்துள்ளது என்றும், ஆனால், வாதிக்கு அனுபவம் பாத்தியம் சித்தித்து உள்ளது என்று தவறுதலாக முடிவு கண்டுள்ளது என்று எடுத்துரைத்தார். ஏற்கனவே இந்நீதிமன்றம் விவாதிக்கப்பட்டுள்ளபடி பி.சாஆ.13ல் தாவா சொத்து சுமார் 30 ஆண்டுகளுக்கு முன்பு விற்பனை செய்யப்பட்டு விட்டது என்றும், வக்பு நிர்வாகம் செய்யப்படவில்லை என்றும் பதிவு செய்யப்பட்டுள்ளது. அவ்வாறு விற்பனை செய்யப்பட்ட 1914ஆம் ஆண்டு முதல் தொடர்ந்து பல பதிவு செய்யப்ட்ட கிரையப்பத்திரங்கள் ஏற்பட்டு, அதன் அடிப்படையில், வருவாய் துறையில் பட்டா வழங்கப்பட்டு கிரையதாரர்கள் தொடர்ந்து கிஸ்து செலுத்தி அனுபவம் செய்து வந்தார்கள் என்று வாதி தரப்பில் முன்னிலைப்படுத்தப்பட்ட வாய்மொழி சாட்சியம் மற்றும் ஆவணங்களின் மூலம் தெளிவாக அறிய முடிகிறது.

PADMANABAN VENKATASAMY
Prinicial District Judge,
Digitally signed by PADMANABAN VENKATASAMY
Location: Perambalur.
Date: 2026.04.29 20:45:35 +0530

அவ்வாறு 30 ஆண்டுகளுக்கு முன்பே தாவா சொத்துக்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளதாக பி.சா.ஆ.13–ல் தெளிவாக பதிவு செய்யப்பட்டுள்ள நிலையில், அது சம்மந்தமான எந்தவித சட்டப்படியான நடவடிக்கையும், வக்பு தரப்பில் எடுக்கப்பட்டதாக ஆவணம் எதுவும் அவர்கள் தரப்பில் முன்னிலைப்படுத்தப்படவில்லை. மேலும், வாதிக்கு ஆதரவாக இனாம் செட்டில்மெண்ட் 30/63 சட்டப்படி பட்டா வழங்கப்பட்டுள்ள நிலையில், தாவா சொத்தில், பாத்தியத்தை பொறுத்து பிரதிவாதிகள் தரப்பில் மேற்படி காலக்கட்டங்களில் தாவா சொத்துக்களில் பட்டா கோரி எதுவும் பெறவும் இல்லை. வக்பு சட்டம் 1995–ல் காலவரை குறித்து பிரிவு 107 அறிமுகம் செய்வதற்கு முன்பே அசல் வழக்கானது 1985ஆண்டு தொடங்கப்பட்டுள்ளது. இந்தச் சூழ்நிலையில், வழக்கு தாக்கல் செய்வதற்கு சுமார் 70 ஆண்டுகளுக்கு முன்பிருந்தே தொடர்ச்சியாக கிரையப் பத்திரங்கள் ஏற்பட்டு, வாதியின் முன் பாத்தியஸ்தர்கள் தாவா சொத்தை அனுபவம் செய்து வந்துள்ள நிலையில், வக்பு சொத்து ஒன்று உரிமை கோர முடியுமா என்று மாண்புமிகு நமது உச்ச நீதிமன்றம் **T.Kaliamurthi And Anr vs Five Gori Thaikal Wakf And Ors (2008) 9 SCC 306** என்ற வழக்கில் தீர்மானித்துள்ளது.

> ***(A) Constitution of India, Art. 133 - Concurrent findings of fact - Not shown that said finding were either perverse or arbitrary - Absence of serious challenge to aforesaid finding of fact - No interference by Supreme Court.***
>
> ***(Para 5)***
>
> ***(B) Limitation Act (36 of 1963), S. 31 and Art. 96 - Applicability of Art. 96 Suits barred under Limitation Act, 1908 - Could not be filed by taking plea that same was within limitation under 1963 Act.***
>
> ***(Para 19)***

PADMANABAN VENKATASAMY

Prinicial District Judge, Digitally signed by PADMANABAN VENKATASAMY Location: Perambalur. Date: 2026.04.29 20:45:39 +0530

***(C) Wakf Act (43 of 1995), Ss. 107, 112 - Scope of S. 107 - S. 107 cannot re-vive barred claim or extinguished rights.***

***2000 (2) Mad LW 66 and C. M. P. Nos. 3200 and 3201 of 2000 in S. A. Nos. 972 and 973 of 1986, D/- 24-4-2000 (Mad.), Reversed.***

……...

6. Let us now come back to the important question that was raised in the form of question No.2, that is to say, whether the suits filed by the Wakf/respondents were barred by limitation and whether the plea of adverse possession was available to the appellants in the suit filed by the Wakf/respondents. So far as the question of limitation is concerned, we may reiterate, as noted herein earlier, that the trial court on consideration of the evidence and other materials on record, held that in the facts and circumstances of the present case and on the interpretation of Article 134-B of the Limitation Act, 1908 and Article 96 of the Limitation Act, 1963 and also relying on several decisions of this Court, rejected the contention of the Wakf/respondents and held that the suits were barred by limitation under Article 134-B of the Limitation Act, 1908. However, in appeal, the first appellate court had taken a contrary view and held that the suits were filed within 12 years of the appointment of the last Muthavalli and accordingly, relying on Article 96 of the Limitation Act, 1963, it held that the suits were not barred by limitation. It was also held by the first appellate court that the alienations of the Wakf properties were by the persons

PADMANABAN VENKATASAMY
Prinicial District Judge,
Digitally signed by PADMANABAN VENKATASAMY
Location: Perambalur.
Date: 2026.04.29 20:45:42 +0530

who were holding them in trust and, therefore, on its understanding of the scope of Section 10 of the Limitation Act, 1963 held that the alienations did not meet the legal requirements for a plea of adverse possession against the trust. Keeping in mind the findings of the trial court and the appellate courts, we may note that the High court, in the impugned judgment, has not given its opinion whether Article 96 of the Limitation Act, 1963 would apply or Article 134-B of the Limitation Act, 1908 would apply in the present case. Without going into this, the High Court instead held that in view of the coming into force of the Wakf Act, the bar of limitation no longer exists and has held that the provision to that effect viz., Section 107 of the Wakf Act would also apply to pending proceedings.

7. In the backdrop of these findings arrived at by the courts below, let us now deal with the submissions made by the learned counsel for the parties before us.

8. According to the learned counsel for the appellants, the suits were clearly barred under the Limitation Act, 1908 and once it has been found that the suits already stood barred under the Limitation Act, 1908, Section 107 of the Wakf Act, which came into force w.e.f. 1.1.1996, could not have the effect of reviving the barred claim. Relying on Section 6 of the General Clauses Act, 1897 the learned counsel for the appellants argued that when Section 6(a) clearly spells

PADMANABAN VENKATASAMY
Prinicial District Judge, Digitally signed by PADMANABAN VENKATASAMY
Location: Perambalur.
Date: 2026.04.29 20:45:47 +0530

out that a repeal shall not revive anything not in force or existing at the time at which the repeal takes effect, the barred claim could not have been revived. He had drawn our attention to Section 112 of the Wakf Act and submitted that when Section 112 of the Act also lays down the provision similar to the one laid down under Section 6(a) of the General Clauses Act, the barred claim could not have been revived. The learned counsel for the appellants further contended that the High Court erred in merely adverting to Section 107 of the Wakf Act holding that it applied to pending proceedings as well. On the other hand, he submitted that the High Court ought to have examined whether Section 107 had the effect of reviving a claim already barred under the Limitation Act, 1908. He also contended that the trial court was fully justified in holding that the claim was barred under Article 134-B of the Limitation Act, 1908 and that the reliance placed by the appellate court on Article 96 of the Limitation Act, 1963 was totally wrong in view of Section 31 of the Limitation Act, 1963. Therefore, the learned counsel for the appellants contended that under Article 134-B of the Limitation Act, 1908, the suits were clearly barred by limitation and, therefore, Section 107 of the Wakf Act could not have the effect of reviving the barred claim as it is settled law that the right to sue is barred under the law of limitation in force before the new provision comes into

PADMANABAN VENKATASAMY
Prinicial District Judge,
Digitally signed by PADMANABAN VENKATASAMY
Location: Perambalur.
Date: 2026.04.29 20:45:51 +0530

operation and the vested right accrued thereon, the new provision could not revive the barred claim or alternatively shall take away the accrued vested right, if any. In support of this contention, the learned counsel for the appellant strongly placed reliance on Section 6(a) of the General Clauses Act, 1897 and Section 112 of the Wakf Act .

***9. So far as the plea of adverse possession is concerned, the learned counsel for the appellants further submitted that since the suit properties were accepted by the State Government as the individual properties of the appellants considering them as absolute owners of the same for which the State Government had granted individual pattas to the appellants in respect of the suit properties, the courts below were wrong in decreeing the suit on the ground that the suit properties were Wakf properties and that plea of adverse possession of the appellants in respect of the same could not be accepted. It was further contended that since the suit properties were the subject matter of alienation as early as in 1927 and there had been successive alienations upto 1975, it must be accepted that the original Inamdars and their legal heirs had perfected the title in respect of the suit properties by adverse possession even prior to 1927. It was also argued by the learned counsel for the appellants before us that the High Court went wrong in declining to allow the application for impleadment of the legal representatives of the deceased***

PADMANABAN VENKATASAMY
Prinicial District Judge,
Digitally signed by PADMANABAN VENKATASAMY
Location: Perambalur.
Date: 2026.04.29 20:45:56 +0530

***V.T.Doraiswami when there were genuine reasons for the delay.***

10. Relying on the aforesaid submissions, the learned counsel for the appellants submitted that the judgment of the High Court in the second appeals should be set aside and the suits should be dismissed.

…..

14. Although we have already briefly noted the findings of the courts below, we feel it proper to undertake a more extensive examination.

The trial court, while dismissing the suits for recovery of possession and mesne profits arrived at the following findings :-

"1.Since Syed Nabi and Syed Mahdoom had sold the suit properties by virtue of Ex. B.13, B.16, B.6 and B.42 dated 2.4.1927, 3.4.1927, 27.4.1927 and since this case was not filed within 12 years after their death, the suit was barred by limitation.

2. The argument that the sale deeds were executed by the then muthavallis not only for self but also on behalf of their minor children viz., Syed Kasim, Syed Kulu and Syed Tipu and since the case was filed within 12 years of the death of such children, the suit was not barred by limitation but could still not be accepted because it could neither be

PADMANABAN VENKATASAMY
Prinicial District Judge,
Digitally signed by PADMANABAN VENKATASAMY
Location: Perambalur.
Date: 2026.04.29 20:46:01 +0530

assumed nor was it pointed out by the plaintiffs that these children were also muthavallis with their fathers.

3. The argument that after the death of the muthavalli in 1922, no muthavalli was appointed till 12.6.1966 on which date the plaintiff was appointed as the muthavalli and the suit was filed within 12 years of such appointment and since the High Court in a decision had stated that a case would not be affected by limitation if no muthavalli was appointed in place of the former muthavalli, these suits would not be barred by limitation, could not also be accepted.

***4. It was evident from the exhibits that the defendant purchased the suit properties in the years 1927 and 1930 respectively and paid the kist etc. to some who enjoyed that property absolutely. Since the suit was barred by limitation*** **and the defendants and** ***their forefathers enjoyed the same for more than 12 years, the plea of adverse possession had to be accepted***."

…...

27. Section 107 provides that nothing in the Limitation Act, 1963 would apply to any suit for possession of immovable property, comprised in any Wakf or for any interest in such property. Therefore, for the application of Section 107, on 1st of January, 1996, the property must be comprised in the Wakf or the Wakf must have some interest in such properties. If however, the right to property stands

PADMANABAN VENKATASAMY
Prinicial District Judge,
Digitally signed by PADMANABAN VENKATASAMY
Location: Perambalur.
Date: 2026.04.29 20:46:05 +0530

extinguished, then Section 107 cannot apply. In the present case, any right which the Wakf had over the property stood extinguished under the Limitation Act, 1908. A similar question came up for consideration of this court in Yeshwantrao Laxmanrao Ghatge and Anr. Vs. Baburao Bala Yadav (Dead) By Lrs. [(1978) 1 SCC 669] wherein this court in paragraph 5 observed as under:-

"In our judgment, there is no substance in any of the points urged on behalf of the appellants. The possession of the purchasers was adverse in respect of all the properties at 1A to 1D and 1F to 1H from the very beginning. By such adverse possession, those who had come in possession of those properties had acquired an indefeasible title under the Indian Limitation Act, 1908. It is not necessary to decide in this case as to which of the articles in the first schedule of the said Limitation Act applied to this case. Whether it was Articles 134, 134A, 134B, 142 or 144 the claim had become barred long, long before the year 1955. The effect of Section 28 of the Limitation Act was that the right to the property was extinguished resulting in conferment of a title by adverse possession on the person in possession of the concerned properties. It is well known that the effect of Section 28 of the Limitation Act is not only to bar the remedy but also extinguish the right. The right to the property itself was dead and gone. It could not be revived by a provision like the one contained in Section 52A of the Act.

PADMANABAN VENKATASAMY
Prinicial District Judge,
Digitally signed by PADMANABAN VENKATASAMY
Location: Perambalur.
Date: 2026.04.29 20:46:10 +0530

> 28. In the present case, as noted herein earlier, the trial court had held that the suits were barred under Article 134B of the Limitation Act, 1908 and, therefore, since the suits were barred under the 1908 Act, in view of Section 31 of the Limitation Act, 1963, Article 96 of the 1963 Act could not be applied. Section 31 was overlooked by the first appellate court. ***Therefore, in our view, when the right stood extinguished, Section 107 cannot have the effect of reviving the extinguished right/claim. This principle has also been followed in Karnataka Steel & Wire Products and others Vs. Kohinoor Rolling Shutters & Engg. Works and others (2003) 1 SCC 76.***

மேற்படி வழக்கில் வக்பு சொத்தில் உரிமை கோரும் தரப்பினர் பெயரில் 1927ஆம் ஆண்டுக்கு முன்பிருந்து தொடர்ந்து 1975ஆம் ஆண்டு வரை பந்தக பராதானங்கள் ஏற்பட்டுள்ளது என்றும், மேலும் சொத்தின் உரிமையாளரின் பாத்தியத்தை ஒப்புக்கொண்டு அரசும் தனிப்பட்ட முறையில் பட்டாவும் வழங்கியுள்ளது என்றும், அது சம்மந்தமாக வக்பு தரப்பில் உரிய காலவரையரைக்குள் நடவடிக்கை எடுக்காத நிலையில், வக்ப் போர்டு கோரும் உரிமை முடிவுக்கு (extinguished) வந்துவிட்ட நிலையில் சொத்தை கிரையம் வாங்கிய தரப்பினருக்கு சட்டப்படி அனுபவ பாத்தியமும் சித்தித்து உள்ளது என்று தீர்மானித்துள்ள சங்கதியானது 1914 ஆம் ஆண்டு முதல் தாவாச் சொத்துக்களைப் பொறுத்து பதிவு செய்யப்பட்ட கிரைய பத்திரங்கள் தொடர்ந்து ஏற்பட்டு கிரையதாரர்களிடம் அனுபவம் உள்ள நிலையில் மேற்படி தீர்ப்புரையில் தீர்மானிக்கப்பட்டுள்ள சங்கதி இவ்வழக்கிற்கு பொருந்தக்கூடியதாகவே உள்ளதாகவும், அதனடிப்படையில், விசாரணை நீதிமன்றம் அனுபவ பாத்தியம்

PADMANABAN VENKATASAMY
Prinicial District Judge,
Digitally signed by PADMANABAN VENKATASAMY
Location: Perambalur.
Date: 2026.04.29 20:46:14 +0530

குறித்து சரியான கோணத்தில்தான் தீர்மானித்துள்ளது என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

26. வாதி தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதுரையின்போது, பிரதிவாதிகள் குறிப்பிடும் பக்கீர் மானியம் என்பது தனிப்பட்ட நபர்களுக்கு பரமரிப்பு அல்லது Personal reward ஆக கொடுக்கப்படுவது என்றும், அது தானாகவே வக்பு சொத்து ஆகாது என்றும், பக்கீர் மானியமானது வக்பு சொத்தாக கருத முடியாது என்றும், பக்கீர் ஆவணமாக தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்களை இவ்வழக்கின் சந்தர்ப்ப சூழ்நிலையில் தாவா சொத்துக்களை சட்டப்படி வக்பு சொத்தாக கருத இயலாது என்று வாதிகள் தரப்பில் வாதிடப்பட்டு, அதற்கு ஆதரவாக நமது மாண்புமிகு உயர்நீதிமன்றம் **(Tamil Nadu Wakf Board represented by its of Secretary, K. T. Fakir Ahmed Vs. S. Syed Imam Saheb and another)** வழக்கில், கீழ்க்கண்டவாறு தீர்மானித்துள்ள சங்கதி சுட்டிக்காட்டப்பட்டது.

> Wakf Act (XXIX of 1954), sections 3 (1) and 66 (c)-Non-Muslim whether can create a wakf as defined in the Act-Grant by Hindu King for purposes of fakkis resorting to darga-Nature of 'Wakf' and 'deemed Wakf-Definition of Scheme for administration of darga framed by the Court - Sanction obtained from civil Court for leasing a small part of concerned property-Whether sufficient- Application under section 36-A of the Act, if necessary.
>
> As per the definition of 'wakf' in section 3 (1) of the Wakf Act, 1954, it is only a permanent dedication by a person professing Islam, of any movable or immovable property

PADMANABAN VENKATASAMY
Prinicial District Judge,
Digitally signed by PADMANABAN VENKATASAMY
Location: Perambalur.
Date: 2026.04.29 20:46:17 +0530

for any purpose recognised by the Muslim law as pious, religious or charitable that will constitute a wakf. When a property granted by a Hindu Ruler, has been shown to have been used for pious, religious or charitable purposes, it cannot be taken to be a wakf, coming under section 3 (1) (iii) of the Wakf Act. The fact that section 66 (e) of the Act deals with certain donations made by non-Muslims as "deemed wakf" will clearly indicate that the dedication made by a non- Muslim will not come within the definition of a 'wakf' occurring in section 3 (i. The inclusive clause will not whittle down or reduce the effect of section 3 (1). The legislature has treated under section 66 (c) of the Act donations or dedications made by non-Muslims for certain stated objects as "deemed wakf" and this will clearly indicate that dedication by non-Muslims will stand excluded from the definition of section 3 (1) of the Act. The suit property was granted by a Hindu Ruler to fakkirs visiting a mosque. It cannot be taken to be a 'wakf' as defined in section 3 (1) of the Wakf Act nor can it be taken to be a 'deemed wakf' as defined in section 66 (c) of the Act. Such being the true legal position the provisions of the Wakf Act including section 36-A will not apply to the suit property. Therefore no sanction under sanction 36-A for leasing out the property either for agricultural or non- agricultural purposes is necessary.

PADMANABAN VENKATASAMY
Prinicial District Judge,
Digitally signed by PADMANABAN VENKATASAMY
Location: Perambalur.
Date: 2026.04.29 20:49:50 +0530

மேலும், **The State Wakf Board, Madras by its Secretary at No. 3. Santhome High Raod, Madras-4. Vs. Ibrahim Sahib and others** வழக்கில்,

Madras Minor Inams (Abolition and Conversion into Ryottoari) Act (XXX of 1963) -"Kyrati Meaning of Personal grant inconsistent with theory of being wakf. 'Kyrati' is defined as a term applied to inams held for personal benefit by Muhammadans and others not being Brahmans. Wilson's Glossary defines it as "alms, charity, lands given as charitable endowments. The term is more specifically applicable to grants or alms given by or to Muhammadans. Kairathi Zamin means the lands given as charity".

These clearly show that it is a personal grant. If it is a personal grant, certainly it could not be a wakf.

……….Kairathi Zamin means the lands given in charity." These clearly show that it is a personal grant. If it is a personal grant, certainly it could not be a wakf and there is no evidence to show that the property was tied down with-out any powers of alienation. In fact, the property was the subject-matter of alienation as seen from the documents produced in this case and the Inam. Fair Register Extract itself does not show that it was inalienable. In order to make the property even as a wakf-alal-aulad, there should be evidence to show that the ulti-mate beneficiary is the poor. The only evidence we have in this case is the Inam Fair

PADMANABAN VENKATASAMY
Prinicial District Judge,
Digitally signed by PADMANABAN VENKATASAMY
Location: Perambalur.
Date: 2026.04.29 20:46:47 +0530

Register Extract and the proforma report of the Assistant Commissioner of Wakfs, Salem. These documents do not, in any manner show that the property was at any time held as a wakf property. The result of it is the suit is liable to be dismissed. The second appeal, accordingly fails and it is dismissed. But there will be no order as to costs. No leave

**மற்றும்**

**The Madras State Wakf Board, represented by its Secretary, having Office at No.3, Santhome High road, Madras Vs. Khazi Mohideen Sheriff** வழக்கில்**,**

(A) Wakf Act (XXIX of 1954), sections 3(1) 5 and 6 Suit against Wakf Board for declaration by Muslim and property wakf Burden of proof on Wakf Board – Survey and preparation of list of Wakfs under the Act – No enquiry regarding character of property – Administrative act – No initial presumption in favour of Wakf Board.

In a suit filed by the plaintiff against the Wakf Board for a declaration of his tittle to the suit property and for a permanent injunction restraining the Board from taking any action pursuant to a notification under Wakf Act, it is the defendant Wakf board which wants to establish that the property is endowed by a Muslim and that it is a Wakf that should shoulder the burden of proof initially.

PADMANABAN VENKATASAMY
Prinicial District Judge,
Digitally signed by PADMANABAN VENKATASAMY
Location: Perambalur.
Date: 2026.04.29 20:46:53 +0530

The Survey and the publication of list of Wakfs made under the Wakf Act by the Commissioner and the Wakf Board is only an administrative act and not a quasi-judicial act. There is no provision under the Act for the Wakf Board to make any enquiry regarding the character of the property. The commissioner makes only a preliminary survey regarding wakſs and a publication of the list of Wakfs is made under section 5. Section 6 which refers to filing of civil suits makes it clear that the decision of the civil Court shall be final.

(B) Wakf Act (XXIX of 1954), section 3 (1)-Walf-Definition- Main part of section Dedication by Muslim for religious, pious and charitable purposes Essential-Inclusive definition in other clauses-Requirements under the main part of definition-To be complied with-Statute-Interpretation.

The main part of the definition in section 3 (1) of the Act makes it clear that the dedication should be by a Muslim and only then it could be a wakf. The second qualification in order to make a dedication, a wakſ, is that it should be for any purpose recognized by the Muslim Law as pious, religious or charitable. The items mentioned in clauses (1) to (ii) in the latter part of the section which gives the inclusive definition should come within the general clause in the first part of the section, which refers to the purpose of the dedication as one recognized by the Muslim Law as pious, religious and charitable.

PADMANABAN VENKATASAMY Prinicial District Judge, Digitally signed by PADMANABAN VENKATASAMY Location: Perambalur, Date: 2026.04.29 20:46:57 +0530

(C) Wakf Act (XXIX of 1954), section 3 (1), 66-G-Scope-Grant by a non-muslim for Kazi service in mosque-Not a wakf.

The very introduction of section 66-C to the Act by the amendment would go to show that unless a grant made by a non-Muslim comes under any of the clauses mentioned in that section, it would not be wakf. A dedication made by a non-Muslim, even if it is for the purposes contemplated under section 3 (1) of the Central Act, would not be a wakf. Section 66-C says that the Act is being applied to properties given or donated by persons not professing Islam for support of certain wakfs. But for this section, which applies the Act to certain grants made by non-Muslims no dedication made by a non-Muslim would be part of wakf property.

Under section 66-C the grant should be for the support of a wakf as described in clauses (a) to (c) in that section. A plain reading of section 66-C indicates that it does not contemplate a non-Muslim creating a wakf himself. He can donate property to an already existing wakf and that too if the wakf is one coming under any of the three clauses mentioned in a Mosque is not one of the wakf mentioned in any one of three clauses in section 66-G.

PADMANABAN VENKATASAMY
Prinicial District Judge,
Digitally signed by PADMANABAN VENKATASAMY
Location: Perambalur.
Date: 2026.04.29 20:47:03 +0530

மேற்படி வழக்குகளில் தீர்மானிக்கப்பட்டுள்ள சங்கதிகளின் அடிப்படையில் மற்றும் பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்களின் அடிப்படையில் வைத்து பார்க்கும்போது, தாவா சொத்துக்கள் பக்கீர் மானியமாக ஏற்பட்டுள்ள நிலையில், வக்பு சொத்தாக சட்டப்படி கருத இயலாது என்று வாதிகள் தரப்பு வாதம் முற்றிலும் நிராகரிக்க முடியாததாக உள்ளது.

27. பிரதிவாதிகள் தரப்பில் மற்றொரு எதிர்வாதமாக வாதியின் முன் பாத்தியஸ்தரான கருப்பாயி அம்மாள் என்பவருக்கு எதிராக 7வது பிரதிவாதி அரியலூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.404/1973-ல் தாவா சொத்தில் சுவாதீனம் கோரி தாக்கல் செய்யப்பட்டு, மேற்படி வழக்கில் 07.08.1973ஆம் தேதியில் தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்ட பின்பு நிறைவேற்று மனு தாக்கல் செய்யப்பட்டு 16.12.1980ஆம் தேதியில் மேற்படி சொத்து 7ஆம் பிரதிவாதிக்கு ஆதரவாக சுவாதீனம் எடுக்கப்பட்டுவிட்டது என்றும், தாவா சொத்து வாதியின் அனுபவத்தில் இல்லை என்றும், மேற்படி வழக்கில் தீர்மானிக்கப்பட்டுள்ள சங்கதியானது தாவா சொத்தை பொறுத்த வாதியின் வழக்கானது முன்தீர்ப்பு தடை தோஷத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்று ஒரு வாதம் எடுத்துரைக்கப்பட்டது. வாதி தரப்பில் மேற்படி சங்கதி குறிப்பாக மறுக்கப்பட்டுள்ளது. பிரதிவாதிகள் குறிப்பிடும் வழக்கானது கருப்பாயி அம்மாளுக்கு தாவாச் சொத்தில் பாத்தியம் குறித்தோ அல்லது உரிமை குறித்தோ முழுமையாக எதுவும் தீர்மானிக்கப்படவில்லை என்றும், பிரதிவாதிகள் குறிப்பிடும் சுவாதீனமானது வெறும் பெயரளவிலானது (Paper/ Sympolic possession) என்றும், அது செல்லத்தக்கது என்றும், அதன் அடிப்படையில் 7ஆம் பிரதிவாதி தாவா சொத்தை அனுபவம் செய்து வரவில்லை என்று எடுத்துரைத்தார். ஏற்கனவே இந்நீதிமன்றம் வாதி தரப்பில் தாக்கல் செய்த ஆவணங்களின் அடிப்படையில் கருத்திற்கொண்டு பார்க்கும்போது, தாவா சொத்துக்கள் பிரதிவாதிகள் குறிப்பிடும் சுவாதீனத்தின்படி 7ஆம்

PADMANABAN VENKATASAMY
Prinicial District Judge,
Digitally signed by PADMANABAN VENKATASAMY
Location: Perambalur.
Date: 2026.04.29 20:47:08 +0530

பிரதிவாதியின் அனுபவத்தில்தான் இருந்து வந்துள்ளது என்று சட்டப்படி இந்நீதிமன்றம் ஏற்றுக்கொள்ளத்தக்க வகையில் எவ்வித சான்றாவணமும் பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்படவில்லை. பிரதிவாதிகள் குறிப்பிடும் குத்தகை அனுபவமும் நிரூபணம் செய்யப்படவில்லை. விசாரணை நீதிமன்றம் சரியாகவே தீர்வு கண்டுள்ளது. அதே சமயத்தில், மேற்படி காலக்கட்டத்திலும் அதற்கு பின்னரும், வாதியின் முன் சுவாந்தரர்கள் தாவா சொத்துக்களை அனுபவம் செய்து வந்தார்கள் என்பது வாதிகள் தரப்பில் போதுமான சாட்சியங்கள் மூலம் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளது. மேலும் அரியலூர் உரிமையியல் நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண். 404/1973ன் வழக்கின் தீர்ப்பாணையை பி.சாஆ.1ஆகவும், Suit register நகல் பி.சா.ஆ.2 ஆகவும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி வழக்கில் பிராது நகலோ அல்லது தீர்ப்புரையின் நகலோ பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்படவில்லை. அவ்வாறே, பிரதிவாதிகள் கூற்றுப்படியே பாரக்கும்போது தாவா சொத்தை கருப்பாயி அம்மாள் சட்ட விரோதமாக அனுபவித்து வந்ததாக சுவாதீனம் கோரி வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று அறிய முடிகிறது. அதாவது தாவா சொத்தின் பாத்தியதை குறித்தோ, அல்லது வேறு ஏதாவது பரிகாரத்திற்காகவோ வழக்கு தாக்கல் செய்யப்படவில்லை. அதாவது சுவாதீனம் கோரி மட்டுமே வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

28. தாவாச் சொத்துக்கள் வக்பு நிர்வாகத்திற்கு பாத்தியப்பட்டது என்று விளம்புகை செய்யக்கோரி எந்த பரிகாரமும் பிரதிவாதிகள் தரப்பில் கோரப்படவில்லை. இந்தச் சூழ்நிலையில் வாதி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதுரையின்போது, முந்தைய வழக்கில் Substantial issue குறித்து குறிப்பாக கேள்வி எழுப்பப்பட்டு, அது குறித்து தீர்மானிக்கப்பட்ட பின்பு, அதன் பின்னர் வரும் வழக்கிற்கு தீர்வு காண வேண்டுமென்று வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருப்பதால்தான், வழக்கு முன் தீர்ப்பு தடை தோஷத்தால்

PADMANABAN VENKATASAMY
Prinicial District Judge,
Digitally signed by PADMANABAN VENKATASAMY
Location: Perambalur.
Date: 2026.04.29 20:47:12 +0530

பாதிக்கப்படும் என்று குறிப்பிட்டு மாண்புமிகு நமது உயர்நீதிமன்றம் கீழ்க்கண்ட வழக்குகளில் தீர்மானிக்கப்பட்டுள்ள சங்கதிகளை சுட்டிக்காட்டினார். மேலும் சட்ட விரோத அனுபவம் இருப்பதாக கூறி சுவாதீனம் கோரி தாக்கல் செய்யும் வழக்குகளில் சொத்தின் பாத்தியத்தை பற்றி தீர்மானிக்காத நிலையில், அது பின்னால் வரும் வழக்கிற்கு முன் தீர்ப்பு தடையாக இருக்காது என்று எடுத்துரைத்து

1. Kamalammal (dead) Annapoornammal (dead) 1. Kalyani 2. K.Ravi Vs.Girija and 2 others (2010 (2) CTC 379),
2. K.Durairaj Vs. Kakri and another (2010 (1) CTC 773)

   மற்றும்

3. Indrabaye Vs. Doressamy Naikar (2010 (1) CTC 1)

   ஆகிய வழக்குகள் சுட்டிக்காட்டப்பட்டது.

1. Kamalammal (dead) Annapoornammal (dead) 1. Kalyani 2. K.Ravi Vs. Girija and 2 others (2010 (2) CTC 379) வழக்கில், நமது மாண்புமிகு உயர்நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு தீர்மானித்துள்ளது.

*Code of Civil Procedure, 1908 (5 of 1908), Section 11 - Res judicata - No substantial issue raised in subsequent Suit was decided in earlier Suit* - Principle of res judicata not attracted. Judged in the background of the weighty legal principles as stated above, it is held that there is no substantial issue available in the present case which was already adjudicated in the earlier Suit and hence no question of bar for the present claim by res judicata would arise. The same view could be applicable to the proceedings in C.S. No. 201 of 1993 instituted by Vidyuthavalli Thayar since no issue was adjudicated.

PADMANABAN VENKATASAMY
Prinicial District Judge, Digitally signed by PADMANABAN VENKATASAMY Location: Perambalur. Date: 2026.04.29 20:47:16 +0530

என்றும், இரண்டாவது வழக்கான 2. K.Durairaj Vs. Ashok Kakri and another (2010 (1) CTC 773) வழக்கில்,

*Code of Civil Procedure, 1908 (5 of 1908), Section 11 - Specific Relief Act, 1963 (47 of 1963), Section 6(1) - Res judicata - Section 6 of person Specific Relief Act deals with remedies available to person who is illegally disposed of immovable property and question of title cannot be gone into such Suit - Suit under Section 6(1) cannot constitute res judicata in so far as it concerns title and it can constitute res judicata only in respect of matters like date of dispossession for purpose of limitation, etc.*

மற்றும்

3. Indrabaye Vs. Doressamy Naikar (2010 (1) CTC 1)வழக்கில்,

*Code of Civil Procedure, 1908 (5 of 1908), Section 11 – Principles of res judicata - Criteria for proof enumerated - Decree of divorce passed by High Court of Creteil wherein certain directions regarding liquidation of assets of parties issued - Whether subsequent Suit for partition of joint assets of parties barred by res judicata? - Held: For an effective plea of res judicata, it must be proved that (i) litigating parties are same, (ii) subject matter of Suit is identical, (iii) matter has been finally been finally decided between parties, and (iv) Suit must be decided by Court of competent jurisdiction - Suit filed for decree of divorce before High Court of Creteil, France- Certain directions with regard to liquidation of spouses' joint assets issued by High Court - However, it was decree of divorce that was primarily adjudicated by High Court - Held: Subsequent Suit for partition of*

PADMANABAN VENKATASAMY
Prinicial District Judge,
Digitally signed by PADMANABAN VENKATASAMY
Location: Perambalur.
Date: 2026.04.29 20:47:21 +0530

*joint assets of parties not identical to earlier proceedings thus not identical Moreover, matter cannot be held directly and substantially in issue unless alleged by one party and denied or admitted either expressly or by necessary implication by other - In case of matters collaterally and incidentally in issue and decided on earlier proceedings, findings therein would not be res judicata in latter proceedings - In judgment of High Cour of Creteil no division made as to entitlement of properties - Peripheral order of High Court in Divorce Application cannot be regarded as executable order in Suit for partition of properties situated in India - Held: Decree of High Court of Creteil would not operate as res judic and render Suit for partition of joint assets of parties as not maintainable.*

ஆகிய வழக்குகளில் தீர்மானிக்கப்பட்டுள்ள சங்கதிகள் இவ்வழக்கின் சந்தர்ப்ப சூழ்நிலைகளுக்கு பொருந்தக்கூடியதாகவே உள்ளது. அதன் அடிப்படையில், பிரதிவாதிகள் தரப்பில் குறிப்பிட்டுள்ளதுபோன்று, அரியலூர் உரிமையியல் நீதிமன்ற அசல் வழக்கு எண்.404/1973 வழக்கின் தீர்ப்பு மற்றும் தீர்ப்பின் அடிப்படையில், வாதியின் இந்த வழக்கு முன்தீர்ப்பு தடை தோஷத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்ற பிரதிவாதிகள் தரப்பு எதிர்வாதமானது சட்டப்படி ஏற்றுக்கொள்ளத்தக்கதாக இல்லை என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

29. 6 மற்றும் 7 பிரதிவாதிகள் தரப்பில் ஆஜரான அரசு தரப்பு வழக்கறிஞர் தனது வாதுரையின்போது, வக்பு சொததுக்கள் சம்மந்தமாக வக்பு சட்டம் 1995 பிரிவு 85ன்படி வக்பு தீர்ப்பாயத்தில்தான் வழக்கு தாக்கல் செய்ய முடியும் என்றும், அதுகுறித்து உரிமையியல் நீதிமன்றங்களில் தாக்கல் செய்ய

PADMANABAN VENKATASAMY
Prinicial District Judge,
Digitally signed by PADMANABAN VENKATASAMY
Location: Perambalur.
Date: 2026.04.29 20:47:24 +0530

இயலாது என்று வாதுரை முன்வைக்கப்பட்டது. அதுபோன்று 6 மற்றும் 7 வது பிரதிவாதிகள் தரப்பு எதிர்வழக்குரையில் எதுவும் குறிப்பிடவும் இல்லை.

30. வாதி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் அசல் வழக்கானது வக்பு சட்டம் 1995 நடைமுறைக்கு வருவதற்கு பல ஆண்டுகளுக்கு முன்பு அதாவது, 1985ஆம் ஆண்டிலேயே வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில் அப்போது இருந்த சட்டப்படி உரிமையாளரால் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படும் வழக்கு நிலைக்கத்தக்கது என்றும் குறிப்பாக எடுத்துரைத்து, அதற்கு ஆதரவாக நமது மாண்புமிகு உச்சநீதிமன்றம் **Sardar Khan and others Vs. Syed Najmul Hasan (seth) and other** வழக்கில் தீர்மானித்துள்ள சங்கதியை சுட்டிக்காட்டினார். மேற்படி வழக்கில் நமது மாண்புமிகு உச்சநீதிமன்றம் கீழ்க்கண்டவாறு தீர்வு கண்டுள்ளது.

> *Wakf Act (43 of 1995), Sections 6, 7(5), 85-Dispute regarding Wakf-Suit, filed on and pending since 19.12.1976, ie, prior to com-mencement of Wakf Act-Held, by virtue of Sections 7(5) and 85, Act, not applicable to pending Suits or Appeals commenced prior to 1.1.1996, i.e., date of coming into force of Wakf Act - Bar of jurisdiction of Civil Court, not applicable.*
>
> *In the present case, it is an admitted fact that Suit was filed on 19.12.1976 before Additional District Judge, Jaipur and arguments were heard and judgment was reserved on 16.12.1995 and the judgment was delivered on 23.1.1996 against which the appeal was filed before the High Court on 1.3.1996. Therefore, from these facts it is clear that the Suit was pending since 19.12.1976, ie., prior to the*

PADMANABAN VENKATASAMY
Prinicial District Judge,
Digitally signed by
PADMANABAN VENKATASAMY
Location: Perambalur.
Date: 2026.04.29 20:47:28 +0530

*commencement of the Act, i.e., 1.1.1996. Therefore, by virtue of sub-section (5) of Section 7, the Tribunal will have no jurisdiction to decide the Suit or the Appeal arising from that Suit.*

*……….12. From the perusal of the afore-quoted Section, there is no ambiguity that the intention was that from 1.1.1996 no suit or other legal proceedings relating to the Wakf property shall be instituted in any Civil Court.*

*13. At the same time subsection (5) of Section 7 also lays down that it will not affect any pending Suit or Appeal. Section 7 states the powers of the Tribunal to determine disputes regarding Wakfs Section 7 of the Act, read as asunder:*

*"Section 7. Power of Tribunal to determine disputes regarding Wakfs. - (1) If, after the commencement of this Act, any question arises, whether a particular property specified as Wakf property in a list of Wakfs is Wakf property or not, or whether a Wakf specified in such list is a Shia wakf or a Sunni Wakf, the Board or the mutawalli of the Wakf, or any person interested therein, may apply to the Tribunal having jurisdiction in relation to such property, for the decision of the question and the decision of the Tribunal thereon shall be final.*

PADMANABAN VENKATASAMY
Prinicial District Judge,
Digitally signed by PADMANABAN VENKATASAMY
Location: Perambalur.
Date: 2026.04.29 20:47:35 +0530

மேற்படி வழக்கில் தீர்மானிக்கப்பட்டுள்ள சங்கதிகள் இவ்வழக்கின் சந்தர்ப்ப சூழ்நிலைகளுக்கு பொருந்தக்கூடியதாகவே உள்ளது. மேலும், இதே தாவா சொத்துக்கள் சம்பந்தமாக 7 ஆம் பிரதிவாதி அரியலூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் சுவாதீனப் பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துவிட்டு, தற்போது உரிமையியல் நீதிமன்றத்திற்கு வழக்கு விசாரிக்க அதிகார வரம்பில்லை என்று எதிர்வாதம் செய்வது எந்த கோணத்திலிருந்து பார்த்தாலும் ஏற்றுக்கொள்ளக்கூடியதாக இல்லை.

31. பிரதிவாதிகள் தரப்பில், மற்றொரு எதிர்வாதமாக வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு வக்ஃப் சட்டம் பிரிவு 56ன்படி 6 மற்றும் 7 பிரதிவாதிகளுக்கு எந்தவித அறிவிப்பும் அனுப்பவில்லை என்றும், எனவே வழக்கு நிலைக்கத்தக்கதில்லை என்று ஒரு வாதம் எடுத்துரைக்கப்பட்டது. வாதி தரப்பில் மேற்படி சங்கதியானது மறுக்கப்பட்டு, அம்மாதிரியான கேள்வி எதுவும் எதிர்வழக்குரையிலும் மற்றும் வழக்கு நடக்கும்போது பிரதிவாதிகள் தரப்பில் எழுப்பப்படவில்லை என்றும், அவ்வாறு கேள்வி எழுப்பப்படாத நிலையில், அது குறித்த உரிமையை பிரதிவாதிகள் தரப்பில் விட்டுவிட்டதாக (waived) கருதிட வேண்டும் என்று கூறி அதற்கு ஆதரவாக நமது மாண்புமிகு உயர்நீதிமன்றம் கீழ்க்கண்ட வழக்குகளில் தீர்வு கண்டுள்ளதாக எடுத்துரைத்தார். **Munuswami Chetty (died) and others Vs. Commissioner, H.R. and C.E (Admn). Madras and another-** (C) Civil P.C.(1980), **வழக்கில்**,

> *S.80 – Waiver of notice -Suit for temple trusteeship under S.70 of T.N. Act 1959 – Filing of suit without notice U/s.80 of C.P.C – Is maintainable*
>
> *....All these apart, the learned counsel for the appellants also pointed out that there could be waiver of notice*

PADMANABAN VENKATASAMY
Prinicial District Judge, Digitally signed by PADMANABAN VENKATASAMY
Location: Perambalur
Date: 2026.04.29 20:47:42 +0530

*required under Section 80 CPC and in that connection he relied on Dhian Singh Sobha Singh V. The Union of India, AIR 1958 SC. 274: 1958 SCR 781 and Commr., H.R.C.E.V.P.Kanniappa Nicker, 1989 TLNJ 232. This claim of waiver is submitted on the ground that in the written statement of the first respondent/commissioner, the above said notice question was not at all raised. In view of the above said decisions, I hold that the suit is maintainable*

**மற்றும்**

**V.V.Textiles, represented by its Proprietor S.Baskaran Vs. M/s.Mahavir Fabrics represented by its Partner, Suryakantha-(2001) 3 MLJ 295) வழக்கில்**,

*.....the Bench drew analogy from Sec.80 of the code of Civil Procedure and referred to the decision of the privy Council in Vellayan Chettiar, Government of the Pravince of Madras (1947) P.C. 197 where it was held that though the provisions of Sec.80, C.P.C. were madatory and must enforced by the Court, it could be waived by the authority for whose benefit it was provided.*

என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது. இவ்வழக்கின் சந்தர்ப்பங்களில் பிரதிவாதிகளுக்கு, வாதி தரப்பில் அம்மாதிரியான அறிவிப்பு எதுவும் அனுப்பப்படவில்லை என்றும் அதனால் வாதியின் வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்று எதிர்வாதம் எதுவும் செய்யப்படவில்லை. அதேபோன்று, வாதியை குறுக்கு விசாரணை செய்தபோதும் கேள்வி எதுவும் எழுப்பப்படவில்லை. மேலும், பிரதிவாதிகள் தரப்பில் சாட்சியத்தின் போதும், அது குறித்த எந்த ஒரு விவரமும் கூறப்படவும் இல்லை. அவ்வாறு வழக்கின் இந்த சூழ்நிலையில்,

PADMANABAN VENKATASAMY
Prinicial District Judge,
Digitally signed by PADMANABAN VENKATASAMY
Location: Perambalur.
Date: 2026.04.29 20:47:50 +0530

அது குறித்த எந்த ஒரு கேள்வியும் எழுப்பப்படாத நிலையில், வாதி தரப்பில் சுட்டிக்காட்டிய வழக்கின் சங்கதிகளின் அடிப்படையில் பார்க்கும்போது, மேற்படி அறிவிப்பு குறித்த எதிர்வாதத்தை பிரதிவாதிகள் விட்டுவிட்டனர் (vaiver) என்றே இந்நீதிமன்றம் கருத வேண்டியதாக உள்ளது.

32. வழக்கு ஆவணங்களின் அடிப்படையில் வைத்து பார்க்கும்போது, 1ஆம் வாதி வழக்கு தாக்கல் செய்யும் காலத்தில் 1 முதல் 5 பிரதிவாதிகளுக்கு எதிராக தனிப்பட்ட முறையில் வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றும், பிரதிவாதிகள் ஆஜரான பின்னர் வக்பு போர்டு, மற்றும் இவ்வழக்கிற்கு தேவையான கட்சிக்காரர் என்றும், குறிப்பாக எதிர்வாதம் செய்யப்பட்டுள்ளது என்றும், அதன் பின்னரே 6 மற்றும் 7 பிரதிவாதிகள் ஒவ்வொருவராக சேர்க்கப்பட்டுள்ளார்கள். இதன்பின்னர் 6ஆம் பிரதிவாதி ஒரு தரப்பினராக சேர்க்க்பபட்டு அதன்பின்னரே, 6ஆம் பிரதிவாதி எடுத்துரைத்ததின்பேரில், 7ஆம் பிரதிவாதியாக வக்பு போர்டு, சென்னை சேர்க்கப்பட்டுள்ளார் என்பதும், தெளிவாக தெரிகிறது. அதாவது வழக்கு தாக்கல் செய்யப்படும்போது, வக்பு போர்டு சேர்க்கப்படவில்லை என்பதும், வழக்கு நிலுவையில் இருக்கும்போதுதான் சேர்க்கப்பட்டுள்ளார் என்பதும், அதிலும் 7ஆம் பிரதிவாதி வக்பு போர்டை ஒரு தரப்பினராக சேரப்பதற்கு முன்பே, திருச்சியிலுள்ள அவருடைய கிளை அலுவலகத்தை 6ஆம் பிரதிவாதியை தரப்பினராக சேர்க்கப்பட்டு, வழக்கு சம்மந்தப்பட்ட முழுமையான விவரம் தெரிந்த பின்னர், அவர் தரப்பில் எடுத்துரைக்கப்பட்ட பின்னரே, 7ஆம் பிரதிவாதி வழக்கில் ஒரு தரப்பினராக சேர்க்கப்பட்டுள்ளார் என்பதும் தெளிவாக அறிய முடிகிறது. எனவே, இவ்வழக்கின் சந்தர்ப்பங்களில், 7ஆம் பிரதிவாதி வழக்கில் சேர்க்கப்பட்ட விதம் மற்றும் நிலை, மேற்படி சூழ்நிலைகளை கவனமாக ஆராய்ந்து பார்க்கும்போது, பிரதிவாதிகள் தரப்பில் சட்டப்படி அறிவிப்பு அனுப்பாததால், வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்ற பிரதிவாதிகளின் வாதம் ஏற்றுக்கொள்ளத்தக்கதாக இல்லை என்றே இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

PADMANABAN VENKATASAMY

Prinicial District Judge,
Digitally signed by PADMANABAN VENKATASAMY
Location: Perambalur.
Date: 2026.04.29 20:47:55 +0530

33. மேற்கண்ட அனைத்து சூழ்நிலைகளையும் மற்றும் நீதியின் நலனையும் கருத்தில்கொண்டு பார்க்கும்போது, தாவா சொத்துக்களை வாதியின் முன் பாத்தியஸ்தர்கள் காலத்திலிருந்து தொடர்ந்து அனுபவித்து வந்துள்ளார்கள் என்றும், தாவா சொத்துக்கள் வாதியின் அனுபவத்தில் உள்ளது என்று ஏற்கனவே விசாரணை நீதிமன்றம் தீர்மானித்துள்ள சங்கதிகளில் தலையீடு செய்ய வேண்டிய அவசியம் இல்லை என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது. அதே சமயத்தில், பிரிவு 56ன் கீழான முன் அறிவிப்பு குறித்தவிசாரணை நீதிமன்றத்தின் முடிவில், தலையிட வேண்டிய அவசியம் உள்ளது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. மேற்படி சாட்சிய சான்றாவணங்களின் அடிப்படையில், கீழமை நீதிமன்றத்தின் தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை இம்மேல்முறையீட்டை பொறுத்துவரை இரத்து செய்யத்தக்கது என்றும், மேல்முறையீட்டு வழக்கு அனுமதிக்கப்பட்டு, 6 மற்றும் 7 பிரதிவாதிகள் குறுக்கு மேல்முறையீட்டில் கோரியுள்ள பரிகாரம் அவர்களுக்கு கிடைக்கத்தக்கதல்ல என்று இந்த பிரச்சினை எண்கள். 2 மற்றும் 3–க்குத் தீர்வு காணப்படுகிறது.

34. இறுதியாக, இந்த மேல்முறையீடு அனுமதிக்கப்பட்டு, மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பெரம்பலூர் அசல் வழக்கு எண்.616/1985ல் கடந்த 28.08.1995 அன்று பிறப்பித்துள்ள தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை இரத்து செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.மேல்முறையீட்டாளர்கள்/வாதிகள் கோரிய விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் வாதிகளுக்கு கிடைக்கத்தக்கது என்றும், குறுக்கு மேல்முறையீட்டாளர்கள்/6, 7 பிரதிவாதிகள் தாக்கல் செய்த குறுக்கு மேல்முறையீடு தள்ளுபடி செய்தும் உத்தரவிடப்படுகிறது.

PADMANABAN VENKATASAMY
Prinicial District Judge,
Digitally signed by PADMANABAN VENKATASAMY
Location: Perambalur.
Date: 2026.04.29 20:47:59 +0530

வழக்கின் தன்மையை கருத்தில் கொண்டு அவரவர் செலவுத் தொகையை அவரவரே ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றும் உத்தரவிடப்படுகிறது.

இந்த தீர்ப்புரையானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் ஒலி வடிவில் குறிப்பு எடுக்கப்பட்டு, பின்னர் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை திருத்தம் செய்யப்பட்டு, 2026 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 29 ஆம் நாள் ஆகிய இன்று அவையறிய பகரப்பட்டது.

PADMANABAN VENKATASAMY
Prinicial District Judge,
Digitally signed by PADMANABAN VENKATASAMY
Location: Perambalur.
Date: 2026.04.29 20:48:03 +0530

முதன்மை மாவட்ட நீதிபதி,
பெரம்பலூர்.

நகல்:
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,
வேப்பந்தட்டை.
(வழக்கு கோப்புடன்)

முதன்மை மாவட்ட நீதிமன்றம்,
பெரம்பலூர்.

வரைவு/தெளிவு தீர்ப்புரை
மேல்முறையீட்டு வழக்கு எண்.62/2000
தேதி: 29.04.2026.